சந்திரகுப்த

சக்கரவர்த்தி

சரித்திரம்

வ. வே. சு. அய்யர்

1909

கம்ப நிலையப் பிரசுரம் ௫—ஆரியசரித்திரமாலை ௧

சந்திரகுப்த சக்ரவர்த்தி சரித்திரம்

காலம் சென்ற நாராயண சாஸ்திரியாரின்
வாதத்தையும் முத்ராராக்ஷஸ
நாடகக் கதையையும் அனுபந்தமாகச்
சேர்த்து

வ. வெ. ஸுப்ரஹ்மண்ய ஐயரால்
எழுதப்பட்டது.

பிரசுரிப்பது
"கம்ப நிலையம்"
௧0௪, காமாக்ஷி அம்மன் கோவில் வீதி,
புதுச்சேரி.

௨—ம் பதிப்பு.] ௧௮௪௧ [ஜ

கம்ப நிலையப் பிரசுரம் ரு—ஆரியசரித்திரமாலை க

சந்திரகுப்த சக்ரவர்த்தி சரித்திரம்

காலம் சென்ற நாராயண சாஸ்திரியாரின்
வாதத்தையும் முத்திராராக்ஷஸ
நாடகக் கதையையும் அனுபந்தமாகச்
சேர்த்து

வ. வே. ஸுப்ரஹ்மண்ய ஐயரால்

எழுதப்பட்டது.

பிரசுரிப்பது
“ கம்ப நிலையம் ”
க0க, காமாக்ஷி அம்மன் கோவில் வீதி,
புதுச்சேரி.

உ—ம் பதிப்பு.] கஅசக [[illegible]

கிறபடி சந்திரகுப்த மௌரியனையும் அலெக்ஸாந்தரையும் ஏககாலத்தில் இருந்தவர்கள் என்று கொண்டே எழுதியிருக்கிறேன்.

இனி, முதற்பதிப்பை அபிமானத்தோடு விமரிசனம் செய்த ஒருவர், நூலில் அன்னிய பாஷைச் சிறப்புப்பெயர்களை வழக்கிலுள்ளபடி எழுதாமல் தமிழ்ப் பெயர்களாக மாற்றியது பொருந்தாது என்று கூறியிருக்கிறார். ஆனால் உயிருள்ள மொழிகள் எல்லாவற்றிலும், அன்னிய பாஷைச் சிறப்புப் பெயர்களை அப்படியே எழுதாமல் சுயபாஷைப் பெயர்களுக்குக் கொடுக்கும் விகுதிகளைக் கொடுத்து எழுதுவதுதான் அதிகமாக வழக்கத்திலிருக்கிறது. ராம:, க்ருஷ்ண:, என்ற சம்ஸ்கிருதப் பெயர்களைத் தமிழில் ராமன், கிருஷ்ணன், என்றே தான் நாம் எழுதுகிறோம். கிருஷ்ணன் என்பது கிருட்டிணன் என்றிருக்கவேண்டும் என்று சொல்வாரும் உளர். ஆனால் பெயர்களைப் பெரும்பாலும் தற்பவமாக்கி எழுதவேண்டியது என்ற விதியை எல்லோரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். இது தமிழில் மாத்திரமில்லை. பிரெஞ்சில் ஸிஸெரோ என்றெழுத மாட்டார்கள். ஸிஸெரோன் என்றெழுதி ஸிஸெரோங் என்று உச்சரிக்கிறார்கள். அவ்விதமே லண்டன் என்பது லோந்த்ர் என்றும்,

இங்கிலாந்து என்பது ஆங்க்ல்தேர் என்றும், டேம்ஸ் என்பது தமீஸ் என்றும் மாற்றப் பட்டிருக்கின்றன. அப்பாஷையில் தற்பவமான அன்னியப் பெயர்களைக் கணக்கிட்டு முடியாது.

கிரேக்கரும் நமது நாட்டுப் பெயர்களைத் தற்சமமாக வைத்திருந்தால் அவர்கள் கூறியுள்ள ஸ்தலங்கள் இன்னவை என்றும், மனிதர் இன்னார் என்றும் நிச்சயிப்பதில் தற்காலத்தில் இத்தனை கஷ்டமிருந்திராது. ஆனால் ஓசையை உத்தேசித்தும், பெயர்களின் அன்னியத் தன்மையைக் கூடியவரையில் குறைப்பதற்கும், வாக்கியங்களின் மற்ற மொழிகளோடு அவைகள் பொருந்தும்படி செய்வதற்கும் கிரேக்கர் அன்னிய பாஷைச் சிறப்புப் பெயர்களைக் கிரேக்காக்கிவிட்டிருக்கிறார்கள். உதாரணமாக, குஸ்ரு, தரியாவஸ், ஆர்த்தஷீர் என்கிற பாரஸீகப் பெயர்கள் கூரோஸ் (ஆங்கிலத்தில் ஸைரஸ் என்று உச்சரிக்கப்படுவது) தாரியோஸ், ஆர்த்தக்ஸேர்க்ஸேஸ் என்று கிரேக்கில் மாறிவந்திருக்கின்றன.

ஸம்ஸ்கிருதத்திலும் இதுவேதான் வழக்கம். இப்படிப் பெயர்களுக்குச் சுயபாஷை உருவம் கொடுப்பது ஆங்கிலத்திலும் கூட உண்டு. கிரேக்கர் அரிஸ்தோத்தேலேஸ்

என்று சொல்லுகிற பெயரை ஆங்கிலர் அரிஸ்டாட்டில் என்று மாற்றிக்கொண்டுவிட்டார்கள். தாய்த்ஷ்லாந்த் என்று சுதேசிகள் சொல்லிக்கொள்ளும் பெயரை ஆங்கிலர் ஜெர்மனி என்று சொல்லுகிறார்கள். நமது தஞ்சாவூரும் திருநெல்வேலியும் ஆங்கிலத்தில் டாஞ்சோர் என்றும் டின்னெவெல்லி என்றும் வழங்குகின்றன.

ஆகையால் வேற்றுப்பாஷைப் பெயர்களுக்குச் சமயோசிதமாகச் சுயபாஷாரூபங்கள் கொடுப்பது சர்வதேசங்களுக்கும் சர்வகாலங்களுக்கும் பொதுவான வழக்கம் என்று ஏற்படுகிறது.

தவிர, அவ்விதம் செய்யாவிட்டால் வாக்கியத்தின் மற்ற மொழிகளுக்கும் அன்னியப் பெயர்களின் சுய உருவங்களுக்கும் பொருத்தமில்லாமல் போய் வாக்கியங்களில் ஓசையும் கெட்டுப்போகும். ஆதலால் தற்காலத்தில் அதிகமாக வழக்கிலுள்ள அன்னியப் பெயர்களைத் தவிர மற்றப் பெயர்களை, அவ்வவற்றிற்கு ஏற்றவாறு தமிழ் விகுதிகள் கொடுத்தும், ஆனால் அவைகளின் உண்மை உருவத்தை அறிந்தவர்கள் தமிழைப் பார்க்கும்போதும், தமிழில் அப் பெயர்களைப் படித்தவர்கள் அவ் அன்னிய பாஷையில் அவைகளைச் சந்திக்கும் போதும் மயங்காமலிருக்கும்படி பகுதிகளை

மாற்றுமலும் எழுதுவதுதான் நியாயம் எனத் தோற்றுகிறது. வடநாட்டுப் பெயர்களை ஆங்கிலர் சொல்லுவதுபோல் சொல்லாமல் வடநாட்டார் சொல்லுவதுபோலச் சொல்லுவதுதான் முறையென்று தோன்றுவதால் டில்லி என்று எழுதாமல் தில்லி என்று எழுதப்படுகிறது.

இது விஷயமாக நாம் இத்துணையும் எழுதியது எதன்பொருட்டு என்றால், தமிழில் சீக்கிரம் வடநாட்டு மேல்நாட்டு நூல்கள் மொழிபெயர்க்கப்படவேண்டும், உலகத்துச் சரித்திரங்களெல்லாம் எழுதப்படவேண்டும், எல்லா நாடுகளின் அமைப்பும் அவைகளிலுள்ள கிராம நகராதிகளெல்லாம் வர்ணிக்கப்படவேண்டும். இதற்கு அன்னிய பாஷைப் பெயர்களைத் தமிழில் எவ்வாறு எழுதுவது என்பதைப்பற்றி ஆசிரியர்கள் ஏறக்குறைய ஐக்கிய மத்தியமாய் ஒரு தீர்மானம் செய்துவிடவேண்டியது அவசியமாதலால் என் அபிப்பிராயத்தை இங்கு காரணங்களோடு தெரிவித்தேன்.

அடுத்த பதிப்பு பதிப்பிக்குமுன் நமது தேச சரித்திரத்தின் தேதிகள் விஷயத்திலுள்ள குழப்பம் போய் ஓர் நிச்சயம் ஏற்பட்டுவிடும் என நம்புவோம்.

"கம்பநிலையம்,"
புதுச்சேரி.

வ. வே. ஸுப்ரஹ்மண்ய
ஐயர்.

பொது முகவுரை

நம் ஆரிய ஜாதியின் மகாவீரர்களின் சரித்திரங்களை ஒவ்வொன்றாக எழுதி வெளிப்படுத்த வேண்டும் என்கிற உத்தேசத்துடன் இந்த ஆரியசரித்திரமாலையைத் துவக்குகிறேன். சரித்திரத்தின் திருஷ்டி பிரவேசிக்கவே முடியாத கற்பகோடி காலங்களுக்கு முன் முதற்கொண்டு நமது நாட்டில் தீரம், திருதி, கொடை, சாந்தம், பரோபகாரம், ஆத்மசந்தர்ப்பணம், பாரமார்த்திக வாழ்க்கை வாழவேண்டுமென்கிற ஆஸ்தை, முதலிய சர்வோந்நதமான வீரகுணங்கள் பிரகாசித்துக்கொண்டு வந்திருக்கையில் ஆரிய வீரர் சரித்திரங்கள் அனைத்தையும் ஒரு மனிதன் எழுதி முடித்துவிடுதல் சாத்தியமன்று என நான் அறிவேன். உலகத்தின் கேந்திர ஸ்தானமான வட துருவம் முதற்கொண்டு கன்னியாகுமரிவரையிலும், ஸஹாரா மணற்காடு என்ன, மத்தியதரைக் கடல் என்ன இவை முதற்கொண்டு பஸிபிக் கடல் வரையிலும் உள்ள பூப்பிரதேசமனைத்தையும் பாதசாரியாய்ச் சுற்றி, அங்கங்கேயுள்ள புராண பவனங்கள், ஆலயங்கள், அரண்மனைகள், மலைகள், நதிகள், ஏரிகள், நகரங்கள், நாடுகள், ஜனசமூகங்கள், ஆகிய இவைகளை அன்போடும் ஆதரவோடும் அறிவோடும் ஆராய்ந்து, நமது

வேதபுராண இதிகாச காவியாதிகளைத் தீரக் கற்று, ஆரிய தர்மத்தினிடம் விசுவாசமும், ஆரிய ஜாதியினிடத்து அன்பும், பாரத மாதாவி னிடத்து அளவில்லாத பக்தியும் வாய்ந்து, இவைகளோடு சரஸ்வதியின் கடாக்ஷத்தையும் பெற்று ஒருவன் இருப்பானேயானால், அவன் தான் ஆரிய வீரர்களின் சரித்திரத்தின் பெரு மைக்கும் உயர்வுக்கும் ஏற்ற ஆசிரியனாவான். அப்பேர்ப்பட்ட வியாஸ பகவானை நாம் தற் காலம் காணுதல் அசாத்தியம். ஆனால் வீரர் சரித்திரம்தான் மனிதனுடைய அறிவுக்கு ஔஷதம். தன்வந்திரி கையால் கொடுக்கும் ஔஷதந்தான் சரியான பயனைக் கொடுக்கு மானாலும், தன்வந்திரி அகப்படாதபோது எப் படி நோயாளி ஒரு சாதாரண பண்டிதனிட மாவது ஔஷதத்தைச் செய்வித்துச் சாப்பிடு தல் தகுதியாகுமோ, அப்படியே தமிழ் நாட் டாரும் இன்னொரு வியாஸன் வரும்வரை காக் காமல் சாதாரணமான ஆசிரியர் எழுதும் சரித் திரங்களைப் படித்து அறிவைப் பெருக்கிக் கொள்ளுவது நியாயமேயாகும். தமிழ் ஜாதி யாரின் பேரில் அளவில்லாத அன்பும், பாரத நாட்டின்மீது சொல்லொணுத காதலும், நம் முடைய வீரபுருஷர்களிடத்து அத்தியந்த மான, அத்துவிதீயமான பக்தியும் இத்தகைய

நினைத்து என்றும் வீரலக்ஷ்மீப் பிரசன்னமாக விளங்கியதும், நமது கண்ணுக்குக் கண்ணான பாரத பூமியே தானாகும்.

இன்னும், மனித ஜாதியைப் பரிபூரண நிலைக்குக் கொண்டுவரும் ரகசியங்களைக் கண்டு பிடித்து, அவைகளைக் கற்பாந்தர காலம் வரையில் பிரயோஜனமாகுமாறு வேதங்களாக வகுத்து, இன்றுவரையிலும் அவைகளைக் காப்பாற்றி வரும் நாடு எது? மனித அறிவு இதற்கு அப்பால் போகமுடியாது என்று கூறும்படியான விசாரணைகள் செய்து, அஹம் ப்ரஹ்மாஸ்மி, தத் த்வமஸி, முதலிய மகா தத்வங்களை உபநிஷத்துக்கள் வாயிலாக வெளியிட்ட நாடு எது? சர்வோத்கிருஷ்டமான காவியங்களையும் கானமார்க்கங்களையும் சிற்பங்களையும் சித்திரங்களையும் உலகத்துக்குக் கொடுத்த நாடு எது? இதெல்லாம் பாரதநாடே. தவிர, உலகத்திலுள்ள கிரிகளுக்கெல்லாம் உந்நதமான இமயகிரி எந்த நாட்டுக்குக் கடத்தற்கரிய அரண்போல விளங்குகிறது? எந்த நாட்டு நதிகளை நினைத்தால் அவை கீர்த்தி பெற்றிராத நாளே இல்லை என்று தோன்றும்? எந்த நாடு பூகோளத்தின் பெரும்பாட்டையாகிற சமுத்திரத்தினின்று பூகோளத்தின் உச்சியாகிற இமயகிரி வரையிலும் சென்று மனித ஜாதி

யின் ஆதி வாசஸ்தானமாகிய ஆசியாகண்டத்திற்கு நடுநாயகமாக விளங்குகிறது? வற்றாத நீர்நிலைகளும், சளைத்துப்போகாத மருத நிலங்களும் விஸ்தாரமான காடுகளும், என்றும் வாடாத சோலைகளும், எந்தநாட்டில் அமோகமாகப் பொலிகின்றன? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் உத்தரமும் பாரதநாடேதான் என்று சொல்லவேண்டும்.

இப்பேர்ப்பட்ட பாரதகண்டமானது மனு முதலான மகான்களால் நீதி தவறாமல் நெடுங்காலமாக ஆளப்பட்டு வந்தது. ஆதியில் சூரிய வம்ச அரசர்கள் அயோத்தியாபுரியை ராஜதானியாகக் கொண்டு ஹிந்துஸ்தானத்தின் ஏகாதிபத்தியத்தை வகித்து வந்தார்கள். ஸ்ரீ ராமபிரான் காலத்துக்குப் பிறகு நாளடைவில் அந்த வமிசத்தின் தேசு குறைந்து வரவே, ஏகாதிபத்தியம் அதன் கையினின்று நழுவிச் சந்திரவமிச அரசர்களின் கையில் சேர்ந்தது. தற்காலம் தில்லியாக விளங்குகிற ஹஸ்தினாபுரம் தான் சந்திரவமிசத்தவரின் தலைநகராக இருந்தது. பாரதயுத்தம் நடந்தபிறகும் நெடுங்காலம் வரையில் சந்திரவமிசத்தின் வீறு குன்றாமலே இருந்து வந்தது. ஆனால் காலசக்கரத்தின் சுழற்சியால் இந்த வமிசமும் சீர்குலைந்து ஏகாதிபத்தியத்துக்கு அநருகமாகி விட்டது.

ஆகையால் மகத ராஜ்ஜியத்தை ஆண்ட சிசு நாக வமிசம் தலையெடுத்து ராஜ கிருகத்தி னின்று ஹிந்துஸ்தானத்தில் சக்ராதிபத்தியம் செலுத்திவந்தது. பிம்பிஸாரனும் அஜாத சத்ருவும் இந்த வமிசத்தில் தோன்றிய அரசர் கள். பிம்பிஸாரன் காலத்தில் மனிதஜாதியின் நாயகங்களான வர்த்தமான மகாவீர பகவா னும் புத்தபகவானும் நமது நாட்டில் தர்மோப தேசம் செய்துவந்தார்கள். மகாவீரனுடைய சிஷிய பரம்பரைக்குத்தான் இன்று ஜயினர் அல்லது சமணர் என்ற பெயர் வழங்குகிறது. புத்தபகவான் தர்மலோகத்தில்போட்ட விதை யானது பிரமாண்டமான விருக்ஷமாகி உல கத்தில் ௫0 கோடி ஜனங்களுக்கு இன்றும் நிழல் கொடுத்துவருகிறது. நமது நாட்டில் இப்பொழுது பௌத்தமதம் வழக்கில் இல்லை. ஜயின மதத்தைப் பின்பற்றுவோரும் சுமார் கரு லக்ஷம் ஜனங்கள்தான் இருக்கிறார்கள். ஆனால் அவுரி விளைந்த நிலத்தில் அவுரி ஓய்ந்து அழிந்தபிறகு பயிர் முன்னிலும் பதின்மடங்கு செழுமையாக விளைவதுபோல, ஜயினமதமும் பௌத்தமதமும் நம் நாட்டில் ஜனத்தொகை விஷயத்தில் மலினமடைந்துவிட்டாலும் அவை களின் சத்தானது நம் இதயத்தை அகற்றி, நம்முடைய வாழ்க்கையின் ஒவ்வொரு பாகத்

திலும் பரவி, நம்முடைய தர்ம லக்ஷியத்தி லேயே புகுந்துவிட்டது.

சிசுநாக வமிசத்தில் சாலிவாகன சகாப்தத்துக்குச் சுமார் ருஉஅ வருஷங்களுக்கு முன் பட்டத்துக்கு வந்த உதயன் என்னும் அரசன்தான் பாடலீபுத்திரம் என்றும் பாடலீ புரம் என்றும் புஷ்பபுரம் என்றும் குஸுமபுரம் என்றும் வழங்கும் நகரத்தைக் கட்டினன் என்பது கர்ணபரம்பரை. அவனுக்குப் பிறகு நந்திவர்த்தனன் என்றும் மகாநந்தி என்றும் இரண்டு அரசர்கள் ஆண்டார்கள். மகாநந்தி இறந்ததும் அவனுக்கு ஓர் சூத்திர மங்கையினிடத்துப் பிறந்த மகன் சிம்மாசனத்தை ஆக்கிரமித்துக் கொண்டு மகாபத்ம நந்தன் என்ற பெயருடன் அரசாக்ஷி புரியலுற்றான். மகாநந்தியோடு சிசுநாக வமிசம் முடிந்து விட்டது என்று சொல்லலாம்.

மகாபத்ம நந்தன் வமிசத்தில் அவன் உள்பட ஒன்பது அரசர் நூறுவருஷம் ஆண்டு வந்தார்கள் என்று புராணங்கள் கூறுகின்றன. ஜயின புராணங்கள் இவர்களுடைய ஆட்சிக் காலம் கருரு வருஷங்கள் எனக்கூறும். எத்தனை வருஷங்களாக இருந்தாலும் கடைசி நந்தனாகிய தனநந்தன்* கொடுங்கோலனாக இருந்

* இவன் பெயர் தனநந்தன் என்று சிங்களவர்களின் இதிகாசமாகிற மகாவமிசம் கூறுகிறது. ஸ்ரீ வின்ஸெண்டு

தான் என்று அனேகமாய் எல்லாக்கதைகளும் ஒத்துக் கூறுகின்றன.

குவிந்தக் குர்ஸியன் என்னும் சரித்திராசிரியன் தன் அலெக்ஸாந்தர் சரித்திரத்தில் பின்வரும் கதை அக்காலத்தில் வழங்கிற்று என்று எழுதுகிறான். அதாவது, பிராசியர்கள் என்ற மகதராஜ்ஜியத்து ஜனங்களின் கடைசி அரசனை அவனுடைய ராணியும் அவளுடைய சோர நாயகனான ஒரு நாவிதனும் சேர்ந்து சூழ்ச்சி செய்து கொன்றுவிட்டுக் காலியான சிங்காதனத்தில் தாங்கள் அமர்ந்தார்கள். அலெக்ஸாந்தர் படையெடுத்த காலத்தில் அரசாண்ட அரசன் அப் பரியாரிக்குப் பிறந்த மகன். வாஸ்தவமான ராஜவமிசத்து இளவரசர்களில் யாரேனும் உயிரோடிருந்தால் தன்னுடைய ஆட்சி நிலைக்காது என்று கண்டு பரியாரி அவர்கள் எல்லோரையும் ஒவ்வொருவராகக் கொன்றுவிட்டான். அவன் மகன் வயது வந்து பட்டத்துக்கு வந்ததும், தன்னுடைய பிறப்பு ஈனமானதால் தன்னிடத்து ஒருவரும் உண்மையான அன்பு வைக்கமாட்டார்கள் என நினைத்துத் தன் பிரஜைகளை வருத்துவானாயி

ஸ்மித் இவன் பெயர்தான் மகாபத்மன் என்று எழுதியிருக்கிறார். இந்த விஷயத்தில் நாம் மகாவமிசத்தையே பின்பற்றுகிறோம்.

ஞன். தவிர அவன் அரசனுக்கேற்ற கௌர வத்தில் நில்லாமல் அற்பசகவாசத்திலும் அற்ப சுகங்களிலும் தன் காலத்தைச் செலவுசெய்து கொண்டு ராஜ்யபரிபாலனத்தைக் குணவீனர் கையில் விட்டுவிட்டிருந்தான். அவர்களும் அக்கிரமமான வரிகள்போட்டு ஜனங்களை இமி சித்து வந்தார்கள்.

ராஜ்ஜியத்தில் எங்கு பார்த்தாலும் அதி ருப்தியாக இருந்தது. சிங்காதனத்தின்மீது ஓர் நாவிதன் மகன் உட்கார்ந்துகொண்டு ராஜ் யாதிகாரம் செலுத்துவதைக் கண்டு பிரஜை களுக்கெல்லாம் வெட்கமும் அவமானமுமாக இருந்தது. ஆனல் அவனை எப்படி அசைப் பது? செல்வமெல்லாம் அவன் கையில் இருந் தது. அவன் படையோ அ,000 ரதங்களும், கூ,000 யானைகளும், அ0,000 குதிரைகளும், உ00,000 காலாட்படைகளும் கொண்ட பிர மாண்டமான சைனியமாகும்.* ஆகவே ஜனங் களும் ஜனத்தலைவர்களும் என்ன செய்வ தென்று தெரியாமல் குழம்பிக்கொண்டு அநே கமாய் நிராசையில் மூழ்கிவிட்டிருந்தார்கள்.

---

* இது புளுதார்க்கின் கணக்கு. குவீந்தக் குர்ஸி யன் என்பவன் ரதங்களின் தொகை உ,000 என்றும், யானைகளின் தொகை ௩000 என்றும், குதிரைகளின் தொகை உ0,000 என்றும் சொல்லுகிறன்.

இந்தச் சமயத்தில் ஓர் வாலிபன் தன் பெயரைச் சொல்லிக்கொள்ளக் கூடப் பயந்து கொண்டு, மாறுபெயர் பூண்டு, ஒருநாள் தங்கிய இடத்தில் மறுநாள் தங்காமல், பரதகண்டம் முழுவதும் சுற்றிக்கொண்டு மறைந்து திரிந்துகொண்டிருந்தான். போகுமிடமெல்லாம் அரசனுடைய கொடுங்கோன்மையால் ஜனங்கள் படும் கஷ்டங்களைக்கண்டு கண்ணால் ஜலம் விடுவான். இத்தனை நல்ல ஜனங்கள் இந்தத் துன்பத்தில் ஆழ்ந்திருக்கின்றார்களே! இதற்கு ஒரு முடிவுமில்லையா ஈசுவரா? என்று ஏங்குவான். இந்தத் துன்பங்களுக்கெல்லாம் காரணமான ஜாரபுத்திரனை தனநந்தனையும் அவனுடைய அதிகாரிகளையும் அடிக்கடி தனக்குள் காய்வான். அரசன்மீது ஆத்ம சம்பந்தமான காரமும் அவனுக்கு இல்லாமலில்லை. ஏனெனில் தனன் தகப்பனால் கொல்லப்பட்ட இளங்கோக்களில் இந்த வாலிபனுடைய தந்தையும் ஒருவன். இவனும் அந்தக் கொலையினின்று தப்பியது தெய்வச்செயல்தான். ஆகையால் அவனுக்கு அரசன்பேரில் க்ஷாத்திரம் இருந்தது என்பதில் ஆச்சரியமில்லை.

அந்த வாலிபன் ராஜவமிசத்தைச் சேர்ந்தவன் என்று சொன்னோம். ஆனால் அவனுடைய தாய் அரச வமிசத்தைச் சேர்ந்

தவள் அல்லள். அவள் ஒரு சூத்திரகுலப் பெண். ஆகையால் சாதாரணமான காலங்களில் சிங்காதனத்தில் தான் ஏறலாகும் என்ற நினைவு கூட அவனுக்கு வந்திராது. ஆனால் நந்தர்களின் சிங்காதனத்தில் ஒரு ஜாரபுத்திரன் வீற்றிருக்கையில், நந்தவமிசத்து ராஜபுத்திரர் வேறு ஒருவரும் உயிருட னில்லாத போது, ஜாரபுத்திரனுடைய பாத்தியத்தை விடத் தன்னுடைய பாத்தியம் எத்தனையோ மடங்கு உயர்ந்தது என்று அவன் நினைப்பது சகஜம்.

ஆகவே இந்த வாலிபன், ஜனங்களின் கஷ்டங்களைக் கண்டு சகியாத துக்கமும், தன் பிதாவையும் தன் குடும்பத்தையும் அழித்து விட்டுத் தன்னையும் பரதேசியாக்கி விட்ட அரசன்மீது உண்டான க்ஷாத்திரமும் மனதை அறுத்துக்கொண்டிருக்க, ஊர்ஊராகப் போய்க் கொண்டிருந்தான். அவன் பெயர்தான் சந்திரகுப்தன். அவன் தான் நமது சரித்திரத்தின் நாயகன்.*

அச்சமயத்தில் பேர் அலெக்ஸாந்தர் என்னும் பிரதாபம் பெற்ற மகெதோனிய அரசன் பாரஸீக ஏகாதிபத்தியத்தை வீழ்த்திவிட்டு, காந்தார தேசத்திலும் அதைச் சுற்றியுமுள்ள

* அனுபந்தத்தைப் பார்க்க.

ஆரிய ஜாதிகளை அடக்கிக்கொண்டு, ஸிந்து நதியைக்கடந்து ஆரியாவர்த்தத்தில் பிரவேசித்து, ஜீலம் நதிக்கரையில் புரூரவா என்னும் அரசனை வென்றுவிட்டுக் கிழக்கே சென்று விபாஸா என்னும் நதிக்கரையில் தன்சேனையை நிறுத்தியிருந்தான். அப்பொழுது யுத்த தந்திரத்தில் தனக்கிணை யில்லையென்று மூன்று கண்டங்களில் தன் இசையை நிறுவியிருந்த மகாவீரனைப் பார்க்கவேண்டுமென்னும் அவாவோடு சந்திரகுப்தன் அவன் பாசறைக்கு வந்தான். அவனோடு அவன் எத்தனைகாலம் இருந்தான் என்பதற்காவது என்ன செய்தான் என்பதற்காவது ஒருவிதச் சாட்சியமு மில்லை. ஆனால் அலெக்ஸாந்தரின் தரிசனம் அவன் மனதிலுள்ள உற்சாகத்தையும் அவாவையும் கிளறிவிட்டிருக்கும் என்பதில் தடையில்லை. சாதாரணமான மனிதருக்கே ஒரு வீரபுருஷனைக் காணும்போது, நாமும் அவன்மாதிரி இருக்க முயலவேண்டும் என்ற எண்ணம் சற்று நேரத்திற்குத் தோன்றுகிறது.* அப்படியிருக்க, இயற்கையிலேயே ஊக்கமும் வீரியமும் திண்மையும் நிரம்பிய மனிதருக்கு வீரர்

* இது உண்மையிலும் உண்மை. நம்முடைய காலத்தில்கூட ஸ்வாமி விவேகாநந்தரைப் பார்த்தவர்கள் மற்றவர்களை விடத் தர்ம சீலர்களாகவும் உற்சாகவான்களாகவும் இருப்பதை நாம் கண்டிருக்கிறோம்.

களின் சந்தரிசனமானது அவர்களுக்கு அது வரையில் இல்லாத வேகத்தைக் கொடுக்கிறது என்பதில் கொஞ்சமேனும் ஆச்சரியமில்லை. அலெக்ஸாந்தரைப் பார்த்தபிறகு சந்திரகுப்தனுக்குத் தானும் மனது வைத்தால் உலகத்தில் ஒரு பெருங்காரியம் செய்துவிடலாம் என்று தோன்றிற்று. "அலெக்ஸாந்தரும் மனிதன் தானே, தேவன் இல்லையே: நானும் மனிதனே: அவன் செய்த வேலை நான்மாத்திரம் செய்ய முடியாதா? ஊக்கமும் பிடிவாதமும் சலியாமையும் மாத்திரம் இருந்துவிட்டால் நானும் என்னுடைய கருத்தைக் கட்டாயம் நிறைவேற்றுவேன்," என்று சிந்தித்துக்கொண்டு சந்திரகுப்தன் தன்னுடைய மனதில் இவ்வரிய தேவகுணங்களை வளர்த்துக்கொண்டு, காலத்தைப் பிரதீக்ஷித்துக்கொண் டிருப்பானாயினன்.

அலெக்ஸாந்தர் நம் நாட்டில் புயற்காற்றுப் போல வந்தான்: புயற்காற்றுப்போலவே திரும்பியும் போய்விட்டான். ஜன்மதேசத்திலிருந்து கிழக்கே ௪00 காதம் வரையில் உற்சாகத்தோடு அவனைத் தொடர்ந்துவந்த வீரர்கள் கடைசியாக இனிமேல் மேலே ஒரு அடி கூட எடுத்து வைக்கமாட்டோம் என்று சொல்லிவிட்டார்கள். அலெக்ஸாந்தர் நல்லவார்த்தைசொல்லிப் பார்த்தான். பயமுறுத்திப் பார்த்தான். எதற்கும்

அவர்கள் மசியவில்லை. வெறும் சிற்றாசனான புரூரவாவே தாங்கற்கரிய போர்கொடுத்து, தங்களால் அரிதில், அகஸ்மாத்தாய்த் தான் வெல்லப்பட்டிருந்த பொழுது, தாங்கள் ஆரியாவர்த்தத்தின் சக்ரவர்த்தியினுடைய சைனியத்தோடு போர்புரிந்து தப்புவது அசாத்தியம் என்று அவர்கள் நினைத்துவிட்டார்கள்.*

ஆகையால் அலெக்ஸாந்தருக்குத் தன் ஊர் நோக்கித் திரும்புவதைவிட வேறு வழியில்லாதாகிவிட்டது. விபாஸா நதிக்கு அக்கரையில் பெரிய ஜயமேடைகள் கட்டிவிட்டு அவன் ச. மு. ௪0௩ இல் (கி. மு. ௩௨௬ இல்) தன் நாடு நோக்கித் திரும்பிவிட்டான்.

ஆரியாவர்த்தத்தை விட்டு நீங்கின ௩ வருஷத்துக்கெல்லாம், அதாவது ச. மு. ௪00 இல் (கி. மு ௩௨௩ இல்) அலெக்ஸாந்தர் இறந்து

* "போருஸ்ஸோடு (அதாவது, புரூரவாவோடு) செய்த போர் மகேதோனியரின் உற்சாகத்தை அவித்துவிட்டது: இந்தியாவில் இன்னும் கிழக்கே செல்லக்கூடாது என்று அவர்களை நினைக்கச் செய்துவிட்டது. ௨0,000 ஆட்களும், ௨,000 குதிரைப் படையும் மாத்திரம் வைத்துக்கொண்டு போர்செய்த சத்துருவை வென்றதே மிகப்பாடாயிருந்தது. ஆகையால் ௩௨ பர்லாங்கு அகலமும் ௧00 பாகம் ஆழமுமுள்ள கங்கையைக் கடந்து செல்லவேண்டுமென்று அலெக்ஸாந்தர் வற்புறுத்திய போது அவர்கள் ஒரே பிடிவாதமாய் மாட்டோம் என்று சொல்லிவிட்டார்கள்."—புளூதார்க்கு.

போய்விட்டான். சந்திரகுப்தனுக்கு அப்பொழுது சுமார் உரு வயதிருக்கலாம். அலெக்ஸாந்தரைவிட்டுப் பிரிந்தநாள் முதற்கொண்டே அவன் படை சேர்க்க ஆரம்பித்திருந்தான். அலெக்ஸாந்தர் இறந்த செய்தி எட்டியதும், பஞ்சாப் நாட்டைத் தன் அதிகாரத்தில் நிலை நிறுத்தி வைப்பதற்காக அவன் நிறுத்திவிட்டுப்போன கிரேக்கப் படைகளைச் சந்திரகுப்தன் முறியடித்து அந்தப் பிரதேசத்தைத் தன் வசமாக்கிக்கொண்டான். அலெக்ஸாந்தரோடு போர்புரிந்த புரூரவாவானவன் சந்திரகுப்தனுக்குப் போர் கொடுக்காமலே வணங்கிவிட்டதிலிருந்து, அவன் சந்திரகுப்தனுக்கு மகத ராஜ்ஜியத்தின் மீதிருந்த உரிமைப்பாத்தியத்தை ஒப்புக்கொண்டானென்று ஏற்படும்.

சக்ரவர்த்தியின் அசிரத்தையாலோ ஆற்றலின்மையாலோ மிலேச்சர் வசம் போய்விட்ட ஒரு பெரிய மாகாணத்தைச் சந்திரகுப்தன் மீட்டுவிட்டான் எனவே அவனுடைய துவசத்தின் கீழ் நின்று போர் புரியக் கணக்கில்லாத வீரர் சேரத் தலைப்பட்டார்கள். நாளுக்குநாள் வளரும் சேனையுடன் அவன் பாடலீபுரம் நோக்கிப் புறப்பட்டான். தன நந்தன் மீதுள்ள அருவருப்பினாலும், சந்திர

குப்தன்தான் ராஜ்ஜியத்துக்கு உரிமையாளன் என்று கண்டதனாலும், போகும் வழியெல்லாம் ஜனங்கள் அவனைத் தங்களைக் காக்க வந்த ரக்ஷகனாகவே நினைத்து அவனுக்குச் சமஸ்தோபசாரமும் செய்து வரவேற்றார்கள்.

சந்திரகுப்தன் மகத நாடு சென்றான். தனனோடு போர்புரிந்தான். தனன் தோற்றுப் போய்விட்டான். அவனையும் அவனுடைய குடும்பத்தையும் பிடித்து, ராஜத்துரோகத்துக்காகவும் குடிகளை வருத்தியதற்காகவும் அவர்களுக்கு மரணதண்டனை விதித்துவிட்டு, சந்திரகுப்தன் பாடலீபுரத்துச் சிங்காதனத்தின் மீது ஏறி அரசாள ஆரம்பித்தான்.

இந்தப் பெரிய காரியங்கள் செய்வதற்குச் சந்திரகுப்தனுக்கு உற்ற துணைவனாகவும் மந்திரியாகவும் இருந்தவன், விஷ்ணுகுப்தன் என்றும் கௌடிலியன் என்றும் சாணக்கியன் என்றும் பல பெயர்களையுடைய ஒரு பிராமணனே. அவன் எந்த நாட்டான் என்று நிச்சயிக்கப் போதுமான ஆதாரங்களில்லை. அவன் காச்மீரத்தான் என்று ஒரு கர்ணபரம்பரை சொல்லுகிறது. ஆனால் அவனுக்குத் திராமிளன் என்ற ஒரு மறுபெயர் இருப்பதினின்றும், தமிழ்நாட்டில் வழங்கும், சோழியன் குடுமி சும்மா ஆடாது, என்கிற பழமொழி

அவனைப்பற்றித்தான் முதல் முதல் பிறந்தது என்ற கர்ணபரம்பரை இருப்பதினின்றும், முத்திராராக்ஷஸ நாடகமும் அவனை முன் குடுமிக்காரன் என்றே வர்ணிப்பதினின்றும், அவன் ஜன்மபூமி தமிழ் நாடான சோழ நாடாக இருந்திருக்கலாம் என்று நினைக்கவும் நியாயம் இருக்கிறது. ஆனால் அவன் எந்த நாட்டானாக இருந்தபோதிலும், ஸிந்துநதிக்கு மேற்கிலுள்ள தக்ஷசீலம் என்னும் நகரிலிருந்த சம்ஸ்கிருதச் சருவகலாசாலையில் கல்வி கற்று, அக்காலத்திலுள்ள சகல சாஸ்திரங்களிலும் தேர்ந்து, அவன் மகாபண்டிதனாக விளங்கினான் என்பதில் கொஞ்சமேனும் சந்தேகமே யில்லை. அவனுக்கும் சந்திரகுப்தனுக்கும் நட்பு எவ்விதம் ஏற்பட்டது என்று கூறும் ஒரு கதை உண்டு. சந்திரகுப்தன் சுதேச பகிஷ்கிருதனாய் ஊர் ஊராய்த் திரிந்துகொண்டிருந்த காலத்தில் ஏதோ ஒரு ஊரில் சாணக்கியனைப் பாட்டையில் எதிருச்சையாய்ச் சந்தித்தான். நடந்து சென்றுகொண்டு போகையில் சாணக்கியன் காலில் ஒரு புல் இடறிற்று. உடனே அவன் திரும்பி, அந்தப் புல்லைக் கிள்ளி யெறிந்த தல்லாமல் அதன் வேரையும் கெல்லி யெடுத்து, அது இருந்த இடத்தில் ஆழமாகப் பறித்துப் பார்த்து, ஒரு துணுக்குச் சல்லிவேர்கூட இல்லாமல் செய்து குழியை

மூடிவிட்டுப் பிறகு மேல் நடந்தான். இதை யெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த சந்திர குப்தன் ஆச்சரியப்பட்டு அவனை நெருங்கி, "நீ என்ன இவ்விதம் செய்தாய்?" என்று கேட்டான். அதற்கு அவன், "உன்னைப் பார்க்கும்போது நீ ராஜலக்ஷணம் பரிபூர்ண மாய் நிரம்பியவனென்றும், தற்காலம் சத்ருருக் களுக்கு அஞ்சி ஓடிவந்திருக்கிறவனென்றும் எனக்குத் தோன்றியதால், சத்ருருக் களை வேர்கூட இல்லாமல் களைந்துவிடுவது தான் ராஜதர்மம் என்று உனக்குக் காட்டுவ தற்காகத்தான் நான் அவ்விதம் செய்தேன்," என்றான். சந்திரகுப்தன் உடனே சந்தோஷப் பட்டு, தான் கொண்ட பெரிய நோக்கத்தை நன்மந்திரியாக இருந்து நிறைவேற்றிக் கொடுக்க அவன்தான் தகுந்தவன் என்று தீர்மானித்து அவனைத் தன்னுடைய பிரிய நண்பனாக்கிக் கொண்டான்.

ராஜ்ஜியத்தை ஜயித்தாகி விட்டது. பிர தம மந்திரியான சாணக்கியன் நடுவுநிலைமை பிறழாமல் நீதி செலுத்தி வந்ததால் * ஜனங் கள் சந்திரகுப்தன் ஆட்சியைச் சந்தோஷத் துடன் ஏற்றுக்கொண்டுவிட்டார்கள். ஆனால் நந்தர்களின் அனுசரர்கள் சந்திரகுப்தனை

---

* முத்திராராக்ஷஸ நாடகம், முதல் அங்கம்.

விழ்த்தப் பல விதமாயும் முயன்று வந்தார்கள். கொலையாளிகளை ஏவி அவனைக் கொல்லப் பார்த்தார்கள். பல சிற்றரசர்களையும் மிலேச்ச அரசர்களையும் தூண்டிவிட்டுப் பாடலீபுரத்தின் மேரில் படையெடுத்து அவனைத் தாக்க முயன்றார்கள். ஆனால் ஒன்றும் பலிக்கவில்லை. கடைசியாக, அவர்களுக்குள் சாமர்த்தியத்திலும், திடசித்தத்திலும், சந்திரகுப்தன் மீதுள்ள பகைமையிலும் முதன்மையானவனும், நந்தர்களுக்கு முதல் மந்திரியா யிருந்தவனுமான ராக்ஷஸன் என்பவனை சாணக்கியனுடைய தந்திரத்தால் வெல்லப்பட்டுச் சந்திரகுப்தனுக்கு மந்திரியாகி அவனுடைய ஆதிபத்தியத்தை ஒப்புக்கொண்டுவிட்டான். *

இந்தக் குழப்பங்கள் எல்லாம் அடங்கி நாட்டில் அமைதி ஏற்பட்டதும் சந்திரகுப்தன், நெடுநாளையக் கொடுங்கோன்மை யி னு லும் அஜாக்கிரதையினுலும் சீர் குலைந்துபோன ராஜ்ஜியநிர்வாக யந்திரத்தைப் புதுப்பித்து, ஒழுங்குபடுத்தி, ஆரியாவர்த்தத்தின் கௌரவத்துக்கும் கீர்த்திக்கும் ஏற்றவாறு அதைச் சீர்செய்து அமைக்கும் பாரத்தைச் சாணக்கியனிடம் ஒப்புவித்தான். அந்தப் பொருள்நூல்

* முத்திராராக்ஷஸ நாடகத்தின் கதை இதுதான். அனுபந்தத்தைப் பார்க்க.

புலவன் செய்த ஏற்பாடுகளைப் பின்வரும் பக்கங்களில் கூடிய மட்டில் விஸ்தரித்துச் சொல்லுவோம். ஆனால் இங்கு தெரிந்துகொள்ள வேண்டிய விஷயம் என்னவென்றால், சாணக்கியன் ஆரியாவர்த்தத்தை அக்காலத்தில் உலகத்திலுள்ள ராஜ்ஜியங்கள் அனைத்திலும் சர்வ விதத்திலும் முதலானதாகச் செய்துவிட்டான் என்பதே. சந்திரகுப்தனுடைய ஏகாதிபத்தியமானது, மேற்கே ஸிந்து நதி, அராபிக் கடல், இவை முதற்கொண்டு கிழக்கே வங்காளக்கடல் பரியந்தமும், வடக்கே இமயமலை முதற்கொண்டு குறைந்தது விந்தியமலை பரியந்தமும் பரவியிருந்தது. விந்தியமலைக்குத் தெற்கேயும் தமிழ் நாட்டுக்கு வடக்கேயுமுள்ள பிரதேசத்தைச் சந்திரகுப்தனே ஜயித்தானு அல்லது அவன் மகனான பிந்துஸாரன் தான் வென்றானு என்று நிர்ணயிக்கப் போதுமான ஆதாரங்கள் இல்லை. ஏகாதிபத்தியத்தின் சைனியத்தின் தொகை ௬0,000 குதிரைப் படையும், ௯,000 யானைகளும், ௬ லட்சம் காலாட்படையும், எண்ணிறந்த ரதங்களுமாக இருந்தது. சேனையின் பலத்தாலும், ராஜ்ஜியாதிகார முறைமையின் நியாயப்போக்காலும், ராஜ்ஜியத்தை நிர்வகிக்கும் தந்திரத்தாலும், ஏகாதிபத்தியத்துக்கு உட்பகையாவது வெளிப்பகையாவது இல்லாம

விருக்கும்படி சந்திரகுப்தன் ராஜ்ஜியபாரம் செலுத்தி வந்தான்.

இதன் மத்தியில் அலெக்ஸாந்தர் இறந்த பிறகு அவனுடைய ஏகாதிபத்தியம் சின்னாபின்னமாய்விட்டது. அவனுடைய சேனாநாயகர்களுக்குள் ஒவ்வொருவனுக்கும் தான் ஒருவனே அவன் வென்ற ராஜ்ஜியங்களனைத்தையும் கவரவேண்டுமென்கிற எண்ணமிருந்ததால், அவர்களுக்குள் பத்துப்பன்னிரண்டு வருஷங்களுக்கு அகோர யுத்தம் நடந்தது. அந்த யுத்தத்தில் ஸெலுக்கன் என்பவன், முதலில் முறியடிக்கப்பட்டுத் தேசாந்திரி போலத் திரியவேண்டிவந்தும், கடைசியாக யூப்ராத்த நதி முதல் ஸிந்து நதி வரையிலுமுள்ள பிரதேசத்தைத் தன் புஜவலியாலும் சாமர்த்தியத்தாலும் வென்று, கொற்றன் (கிரேக்கில், நிகாதோர்) என்று பட்டப்பெயர் பூண்டு அரசாட்சி புரிந்துவந்தான். அவன், அலெக்ஸாந்தர் திரும்பிவிட்ட பிறகு கிரேக்கர் கைவசமிருந்து நழுவிவிட்ட மாகாணமான பஞ்சாபை மறுபடி வெல்லவேண்டுமென்றும், கூடுமானால் அலெக்ஸாந்தராலும் வெல்லப்படாத ஆரியாவர்த்தத்தின் இதர பாகங்களையும் கவரவேண்டும் என்றும் எண்ணங்கொண்டு ச. மு. ௩அ௨ இல் (கி. மு. ௩●ரு இல்) ஒரு பெரிய சேனையோடு ஸிந்து நதியைக் கடந்தான்.

ஆனால் கொற்றனுடைய ஜயம் சந்திரகுப்தனிடம் செல்லவில்லை. கிரேக்கனுடைய சைனியம் ஆரியனுடைய சைனியத்துக்கு முன் நிற்க முடியாமல் புறங்காட்டி ஓடிவிட்டது. ஸெலுக்கன் தோல்வியை ஒப்புக்கொண்டு சந்திரகுப்தனைச் சமாதானமாகப் போகவேண்டுமென்று கேட்டுக்கொண்டான். சந்திரகுப்தனும் சம்மதித்தான். சந்திரகுப்தன் நிருமித்தபடி, ஆரியாவர்த்தத்திற்கு மேற்கேயுள்ள, தற்காலத்தில் ஆப்கானிஸ்தானம், பெலுசிஸ்தானம் என்று வழங்குகிறதும் அக்காலத்தில் ஆரியானு என்று வழங்கியதுமான, நாட்டை ஸெலுக்கன் சந்திரகுப்தன் வசம் விட்டுவிட வேண்டியதென்றும், ஸெலுக்கனுடைய குமாரத்தியைச் சந்திரகுப்தன் மணக்கிறதென்றும், சந்திரகுப்தன் ஸெலுக்கனுக்குப் பரிசாக ரு00 யானைகள் கொடுக்கிறதென்றும், பாடலீபுர அரசவைக்கு ஸெலுக்கன் ஒரு தூதனை அனுப்பி வைக்க வேண்டியதென்றும், இரண்டு அரசர்களுக்கும் ஒரு ஒப்பந்தம் நடந்தது.* அதன் பிரகாரமே சந்திரகுப்தனும் ஸெலுக்கனுடைய பெண்ணை விவாகம் செய்து கொண்

---

* சந்திரகுப்தனும் ஸெலுக்கனிடம் ஒரு தூதன் அனுப்பியிருப்பான். ஆனால் அதைப்பற்றி ஒரு சரித்திராசிரியனும் பேசவில்லை.

டான். மெகாஸ்தனன் என்பவனும் ஸெலூக்கனு டைய தூதனாக ஆரியாவர்த்தத்திற்கு வந்தான்.

கிரேக்கருக்கும் ஆரியருக்கும் நடந்த போர் இவ்வாறு முடிந்தது. ஆரியானாவைப் போன்ற ஒரு பெரிய நாட்டைக் கொடுத்தாவது சமாதானம் செய்துகொண்டு விடவேண்டு மென்று ஸெலூக்கன் நினைத்ததற்குக் காரணம் அவன் போரில் சந்திரகுப்தனால் நன்றாகப் புடைக்கப்பட்டதாகத்தான் இருக்கவேண்டுமே யொழிய வேறேதாகவு மிருக்க நியாயமில்லை. அலெக்ஸாந்தரின் யுத்தங்களில் போர் நுணுக்கங்களை யெல்லாம் கற்றவனும், தான் பெற்ற வெற்றிகள் காரணமாகக் கொற்றன் என்ற பட்டப்பெயரும் பெற்றவனுமான ஸெலூக்கனைச் சந்திரகுப்தன் ஒரு போரிலேயே அடக்கி அவனுடைய ஊக்கத்தையும் அழித்துவிட்டான் என்னும்போது சந்திரகுப்தனுடைய வல்லமை ஒருவாறு விளங்கும்.*

* சந்திரகுப்தனிடம் தோற்றுப்போனபிறகு ஸெலூக்கனானவன் மேற்கே சுமார் ந,000 கல் சென்று, அலெக்ஸாந்தரின் மற்றொரு சேனாநாயகனாக இருந்தவனும், தன்னைப் பலதடவைகளில் முறியடித்து விட்டிருந்த பகைவனுமான ஆந்திகோனன் என்னும் அரசனை வென்று அவன் ராஜ்ஜியத்தையும் கட்டிக்கொண்டானாகையால், அவன் சாமானிய வீரன் அல்ல என்றும், சந்திரகுப்தனோடு போர்செய்த காலத்தில் திறமை குன்றிப்போய் விட்டவனும் அல்ல என்றும் ஏற்படும்.

ஆனால் நமது சக்ரவர்த்தி கேவலம் போர் வீரன் மாத்திரம் இல்லை. அவன் குடியோம்பலில் சம்பாதித்த புகழானது அவன் போர் செய்து வென்ற புகழைக் காட்டிலும் கூடப் பெரிதாயிருக்கிறது. பெரிய மகாராஜாக்களுக்குத் திறமையும் வாய்மையும் சான்றாண்மையும் நிறைந்த அமைச்சர் அமைவது இயற்கை. அப்படியே சந்திரகுப்தனும் தன் அமாத்திய சபைக்குப் பெரிய அறிவாளிகளையும் தந்திர சாஸ்திர நிபுணர்களையும் ஜனங்களிடத்தில் அபிமானமுடையவர்களையும் பிரதானிகளாகத் தேர்ந்தெடுத்து, மனிதருடைய உள்ளத்தைக் கண்டறிவதில் தனக்குள்ள சாமர்த்தியத்தையும் தன் பிரஜைகளினிடத்துத் தனக்குள்ள அன்பையும் காட்டினான். இந்த அமாத்திய சபைக்கு நடுநாயகமாக விளங்கியவன் நாம் ஏற்கெனவே பிரஸ்தாபித்திருக்கும் சாணக்கியனே. அவன் தன் நய சாஸ்திர ஞானம் அனைத்தையும் தன் அரசன் என்ன, தன் நாட்டார் என்ன, இவர்களது க்ஷேமத்தின் பொருட்டே வஞ்சனையின்றிப் பிரயோகித்து வந்தான். சக்ரவர்த்தியும் அவனுடைய ராஜ்ய தந்திர நைபுண்ணியத்தைக் காட்டுவதற்கு அவனுக்குச் சகலவிதத்தாலும் இடம் கொடுத்தான். ஆகவே இவ்விருவருடைய பெருமுயற்சியாலும் இதரப் பிரதானிகளுடைய உதவியி

ணும் நமது ஆரியாவர்த்தத்தில் ஒரு வலி பொருந்திய, ஆனால் அதே காலத்தில் ஜனங்களின் க்ஷேமத்தைப் பிரதான நோக்கமாகக் கொண்ட, ராஜ்ஜியாதிகாரம் நிலை நிறுத்தப் பட்டு நடைபெற்றுவந்தது.

அரசு நடத்தவேண்டிய மார்க்கம் இது என்று சவிஸ்தாரமாகக் காட்டிச் சாணக்கியன் ஒரு நூல் எழுதி யிருக்கிறான். அதன் பெயர் அர்த்தசாஸ்திரம், அதாவது பொருள் நூல். அந்த நூல் இந்த நாள் வரையில் நம் நாட்டில் கற்கப்பட்டு வந்திருக்கிறது. அவன் அபிப் பிராயங்கள் அனைத்தையும் காரியலோகத்தில் கொண்டுவரச் சாணக்கியனுக்குச் சக்ரவர்த்தி சர்வாதிகாரங்களையும் கொடுத்திருந்தமையால், சக்ராதிபத்தியத்தின் நிருவாக காரியமெல்லாம் ஏறத்தாழ அந்த அர்த்தசாஸ்திரத்தில் வர்ணித்திருக்கிற பிரகாரமே நடைபெற்று வந்தது என்று சொல்லுவது பொருந்தும். தவிர செலுக்கனுடைய தூதனான மெகாஸ்தனன், தான் ஆரியாவர்த்தத்தில் கண்ட கேட்ட விஷயங்களை யெல்லாம் கிரேக் பாஷை யில் குறித்து வைத்து ஒரு நூல் எழுதியிருந் தான். அதில் சில பகுதிகள் இக்காலம் வரை எஞ்சி நிற்கின்றன. அவைகளில் காணும் விவரங்கள் அர்த்தசாஸ்திரத்தில் சொல்லியிருக்

கும் விவரங்களோடு பொருந்தக்கூடிய விஷயங்கள் அனைத்திலும் பொருந்தியே இருப்பதனால் நம்முடைய மேற்கூறிய வாதம் வலி பெறுகிறது. இந்த இரண்டு நூல்களின் உதவியைக்கொண்டு இதிகாச ஆசிரியர்கள் சந்திரகுப்தனுடைய அரசியல் இவ்வாறிருந்தது என்று ஒருமட்டுக்குத் துணிந்திருக்கிறார்கள். அதைச் சுருக்கமாக வர்ணிப்போம்.

ஏகாதிபத்தியத்தின் ராஜதானி பாடலீபுத்திர நகரம் என்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறோம். அதிலிருந்து ராஜபாட்டைகள் மேற்கும், கிழக்கும், தெற்கும் வடக்குமாகச் சக்ராதிபத்தியத்தின் எல்லைகள் வரையிலும் சென்றன. அவை வியாபாரப் போக்குவரத்துக்காகவும், ஜனங்களின் தீர்த்தயாத்திராதி பிரயாண வசதிக்காகவும், ராஜ்ஜியத்தைக் காப்பதற்காகச் சைனியங்களை அதிவேகமாக ஒரு இடத்தினின்றும் மற்றொரு இடத்துக்குக் கொண்டுபோவதற்காகவும் உபயோகமாகுமாறு அகலமாயும், கெட்டியாயும் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. அந்த ரஸ்தாக்களின் அகலம் பெரும்பாலும் ச தண்டம், அதாவது ஙஉ அடியாக இருக்கும். சிற்சில இடங்களில் அவை அ தண்டம் அகலமும் அகன்றிருந்தன. பாட்டைகளின் இரண்டு பக்கங்களிலும்

பிரயாணிகளுக்கும் கால்நடைகளுக்கும் நிழல் தருமாறு பெரிய பெரிய மரங்கள் வைக்கப் பட்டிருந்தன. ரஸ்தா நெடுகலும் அரைக் குரோசத்துக்கு* ஒரு கல் வீதம் கற்கள் நட்டு, ராஜதானியிலிருந்து எத்தனை தூரம் என்று காட்டுவதற்கு அந்தக் கற்களில் எண் களும் வெட்டப்பட்டிருந்தன. பெரிய ரஸ்தாக் களிலிருந்து கிளை ரஸ்தாக்களும், அவைகளி னின்று இன்னும் சிறு பாதைகளும் பிரிந்து, ராஜதானியோடு கடைசித் தரமான கிராமங் களையுங்கூட இணைத்துவிட்டிருந்தன. ஆனால் போக்குவரத்துச் சௌகரியங்களுக்காக ரஸ் தாக்கள் மாத்திரந்தான் என்பதில்லை. ராஜாங் கமானது நதிகளில் போதுமான படகுகள் நிறுத்தி வியாபாரிகளுக்கும் பிரயாணிகளுக் கும் சௌகரியங்கள் செய்திருந்ததோடு, அங் கங்கே கால்வாய்கள் அகலமாக வெட்டி, நதி களை ஒன்றோடொன்று பிணைத்து, போக்கு வரத்து வசதிகளை இன்னும் அதிகமாக விருத்திசெய்திருந்தது. இதனால் பிரமாண்ட மான மலைப்பிரதேசங்களில் விழும் மழை ஜலத்தை அப்படியே பிரயோஜனமின்றி

---

* குரோசம் என்றால் கால்யோசனை தூரம்; யோசனை என்பது தற்கால அளவுக்கு அ அல்லது கூ கல் இருக்கும்.

அல்லது சுவற்பப் பிரயோஜனத்தை மாத்திரம் தந்துவிட்டுச் சமுத்திரத்தில் வீணாய்ப் போய்ப் பாயும்படி விட்டுவிடாமல், சந்திரகுப்த னுடைய ராஜாங்கமானது அதையெல்லாம் ஜனங்களை ஒரு ஊரினின்று மற்றோர் ஊருக் குக் கொண்டுபோகும் வாகனமுமாகும்படி செய்துவிட்டிருந்தது. இந்த ஏற்பாட்டினால், நதிகளுக்கு நெடுந்தூரத்திலிருப்பதால் வானம் பார்த்தவையாகத்தானிருந்த பூமிகளும்கூட நிரந்தரமான நீர்ப்பாய்ச்சல் பெற்றுப் பெரும் பயனைத் தந்தன.

ராஜதானியின் நிர்வாக காரியங்களைப் பார்ப்பதற்கென்று ஒரு நகரச்சபை தெரிந் தெடுக்கப்படும். ஏகாதிபத்தியத்தின் மற்றப் பெரிய நகரங்களின் காரியங்களும் இதேமாதிரி தெரிந்தெடுக்கப்பட்ட சபையால்தான் நடத்தப் பட்டன என்று நினைக்கவும் இடமிருக்கிறது. அந்தச் சபையில் ௩௦ சபிகர்கள் நியமிக்கப் படுவது நியதி. அவர்கள் ஐந்து ஐந்து பேர்களாகச் சேர்ந்த ஆறு குழுக்களாகப் பிரிக்கப்பட்டிருப்பார்கள். ஒவ்வொரு குழு வுக்கும் அதிகாரமும் கடமைகளும் பிரத்தி யேகமாக இருந்தன. முதல் குழுவானது நக ரத்திலுள்ள கைத்தொழில் சம்பந்தமான சகல விவகாரங்களையும் கவனிக்கும். தொழிலாளி

களுக்கு இன்ன கூலி கொடுக்கவேண்டிய தென்று நிர்ணயிப்பதும், தொழிலாளிகள் 'கழிப்பணி' செய்யாமல் சரியாக வேலைசெய்கிறார்களா என்றும் எஜமானர்கள் அவர்களுக்குச் சரியான கூலி கொடுக்கிறார்களா என்றும் பார்த்துக்கொள்வதும், அந்தக் குழுவின் வேலையாகும் என்று ஊகிக்கத்தக்கது. இரண்டாவது குழுவானது நகரத்துக்கு வரும் வேற்றூர் யாத்திரிகர்களைக் கவனித்துக்கொள்ளும். அவரவர்களுடைய அந்தஸ்துக்குத் தக்கபடி யாத்திரிகர்களுக்கு மரியாதை செய்வதும், அவர்கள் வேற்றரசர்களின் ஒற்றாக இருந்தால் அவர்களை அவர்களுக்காக ஒற்றுத்தொழில் செய்யாதிருக்கும்படி தடுப்பதும், இறந்து போய்விட்ட பிரயாணிகளுடைய பிரேதங்களை அடக்கம் செய்து, சொத்துக்களைப் பதனப்படுத்தி, அவர்களுடைய பந்துக்களை நாடி அவர்களிடம் அவைகளை ஒப்புவிப்பதும், அந்தக்குழுவின் காரியமாகும். ஜனன மரணக் கணக்கு வைப்பது தற்கால வழக்கம் என நாம் நினைக்கிறோம். ஆனால் நகரச் சபையின் மூன்றாவது குழுவின் பிரதான வேலை அதுதான். நகரத்தின் முக்கியமான தனம் ஜனங்களேதானகையால் நகரச் சபையின் தலைவனான நாகரிகனே தான் இந்தக் குழுவில் தலைமை வகித்

தான். நகர ஜனங்கள் ஒவ்வொருவருடைய யோகக்ஷேமங்களையும் விவரமாக விசாரித்து ஒரு புத்தகத்தில் பதிந்து வைப்பதும் இவனுடைய கடமையாகும். நான்காவது கூட்டம் வியாபாரங்களையும், ஐந்தாவது கூட்டம் பெரிய கைத்தொழில்களையும் தனித்தனி கவனித்து வந்தன. ஆறாவது குழு நகரத்து ஜனங்களுக்கு வரி விதித்து வசூலித்து வந்தது.

ஏகாதிபத்தியமானது அநேக மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு மாகாணமும் மகாமாத்தியன்* என்று அழைக்கப்படும் ஒரு பேரதிகாரியின் கையில் ஒப்புவிக்கப்பட்டிருந்தது. முக்கியமான மாகாணங்களில் சந்திரகுப்தன் இளங்கோக்களையே மகாமாத்தியராக நியமித்து வந்ததாகத் தெரிகிறது. ராஜ்ஜியத்தின் எல்லைப்புறங்களில் தேர்ந்த போர்வீரர்களையே நியமித்து வந்தான். அவர்களுக்கு அந்தமகாமாத்தியர் † என்ற பெயர் கொடுத்து, அவர்கள் வசம் ஒரு பெரிய சேனையையும் ஒப்புவித்திருந்தான். சத்துருக்கள் யாரேனும் நாட்டைத் தாக்கினால் பிரதான சைனியத்தைக் கொண்டுவந்து அவர்களை எதிர்த்துத் தாக்கும்வரையில் அவர்களைப் போர்

* அதாவது, மகா அமாத்தியன் — மந்திரி.
† அந்தம் — எல்லை.

கொடுத்துத் தேக்கிவைப்பது இவ் அந்தமகா மாத்தியரின் காரியமாகும்.

மகாமாத்தியர் தங்கள் அதிகாரத்துக்குட்பட்ட குடிகளை வருத்தாது சரிவரப் பாதுகாக்கிறார்களா என்று பார்த்துக்கொள்ளுவதற்கென்று ஏகாதிபத்தியத்தில் சில அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்தார்கள். இவர்கள் வெளிப்படையான உத்தியோகச் சின்னங்கள் ஒன்றுமின்றிச் சென்று, அந்தந்த மாகாணங்களின் அதிகார முறைமையைத் தாங்களே நேரிடக் கண்டும், குறைகூறுவோரிடம் விஷயங்களைக் கிரகித்தும், குறிப்புகள் எழுதி ராஜதானி மந்திரசபைக்கு அனுப்பிவிடுவார்கள். இம்மாதிரி மேல்நாட்டக்காரர் உலாவுகிறார்கள் என்கிற ஞாபகமே கூட மகாமாத்தியர்களை நெறி பிறழாமல் குடியோம்பல் செய்யும்படி தூண்டப் போதிய 'ஹத்'தாக இருந்தது. மகாமாத்தியர்களுக்கே இவ்விதம் வைத்திருந்த போது கீழதிகாரிகளையும் கண்காணித்துவர ஒற்றர் போன்ற அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்தார்கள் என்பதைச் சொல்லவேண்டியதில்லை.

நாள் தோறும் நாடுக மன்னன் : வினைசெய்வான்
கோடாமை, கோடாது உலகு,

என்ற செஞ்சொல்லின் கருத்து சந்திரகுப்தன் அரசியலில் சர்வசாதாரணமாக இருந்தது.

நீதி செலுத்தும் முறைமை ராஜ்ஜியத்தில் வெகு ஏற்பாடாக அமைக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு வழக்கிலும் உண்மை இன்னது என்று தெரிந்துகொள்ளுவதற்குச் சரியான சாதனங்கள் வைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு கோட்டத்திலும் (கோட்டம் என்பது ஜில்லா) தர்மஸ்தீய ஸ்தலம் என்றும், கண்டகசோதன ஸ்தலம் என்றும் இரண்டு வகையான நீதி ஸ்தலங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. வழக்குகளின் பாகுபாடு தற்காலத்தில் வழங்குவதுபோல வியவகார வழக்கு (ஸீவில்), குற்றவழக்கு (கிரிமினல்), என்று இல்லை. மனிதர் செய்யும் தீங்குகள், தனி மனிதர்களுக்கு மாத்திரம் இடைஞ்சலான தீங்குகள் என்றும் ராஜாங்கத்துக்கு அல்லது நாட்டுப் பொதுவுக்கு இடைஞ்சலான தீங்குகள் என்றும் வகுக்கப்பட்டு, முதற்சொன்னவை தர்மஸ்தீய சபையிலும், பிற்சொன்னவை கண்டகசோதன சபையிலும் விசாரிக்கப்பட்டு வந்தன. கொலை, தீ வைத்தல், முதலிய குற்றங்கள் பிற்சொல்லிய வகுப்பில் சேர்ந்தவையாகப் பாவிக்கப்பட்டன. 'ஜூரி'கள் நியமிப்பது ஆங்கிலேயருக்குள்ளேதான் முதல் முதல் ஏற்பட்ட வழக்கம் என்ற அபிப்பிராயம் உலகத்தில் பரவியிருக்கிறது. ஆனால் இது சந்திர

குப்தன் காலத்திலேயே அனுசரணையில் இருந்தது என்பதற்குப் போதிய ஆதாரங்கள் இருக்கின்றன. கண்டகசோதன சபையில் நியாயாதிபதிகளாக உட்காரும் மூன்று அமாத்தியர்களோடு, அவர்களுக்கு உதவியாகப் பிரதேஷ்டாக்கள் என்ற பெயருடன் தெரிந்தெடுக்கப்பட்ட மூன்று மனிதரும் உட்காருவார்கள். இவர்கள் குற்றம் நடந்த ஸ்தலத்தைப் போய்ப் பார்த்தும், அவ்விடத்திலிருக்கும் யோக்கியர்களோடு சம்பாஷித்தும், தெரியக்கூடியவைகளை யெல்லாம் தெரிந்துகொண்டு வந்து, அவைகளைச் சாக்ஷிகளின் வாக்குமூலங்களோடு ஒப்பிட்டுப் பார்த்து, கடைசியாகத் தங்களுக்கு உண்மையென்று தோன்றும் அபிப்பிராயத்தை அமாத்தியர்களிடம் சொல்லுவார்கள். அவர்களுடைய அபிப்பிராயங்களையும் அவைகளின் ஆதாரங்களையும் ஆராய்ந்து பார்த்து அமாத்தியர் மூவரும் சேர்ந்து தீர்மானம் சொல்லுவார்கள். ஆகவே, சாக்ஷிகள் தம் மனம்போனவாறெல்லாம் நிர்ப்பயமாய்ப் பொய் சொல்லச் சந்திரகுப்தன் காலத்து நீதி நிர்வாக தந்திரம் கொஞ்சமேனும் இடம் கொடுக்காததாக இருந்தது. நியாயாதிபதிகள் மனச்சாக்ஷிக்கு விரோதமாகவாவது நீதி நூல்களின் விதிகளுக்கு விரோதமாக

வாவது தீர்மானிப்பதை முற்றிலும் தடுப்பதற்காக இன்னொரு சுகமான விதியும் அவ்வரசியலில் இருந்தது. அதாவது, பாரபக்ஷம் காட்டியாவது, நீதிசாஸ்திர அறிவின்றியாவது, தவறான தீர்மானங்கள் சொல்லும் நியாயாதிபதிகளுக்குத் தண்டனைகள் விதிக்கப்பட்டிருந்தன.

பஞ்சாயத்துச் சபைகளும் அந்தந்தக் கிராம எல்லைகளுக்குள் நடக்கும் வழக்குகளையும் குற்றங்களையும் தொன்று தொட்டு வந்த வழக்கம் போலவே விசாரித்து வந்தன.

ஜனங்களின் க்ஷேமத்தையே பெரு நோக்கமாகக் கொண்ட சந்திரகுப்தன் அரசியலில் விவசாய விஷயங்களைக் கவனிப்பதற்கென்று ஒரு தனிக் குழு அமைக்கப்பட்டிருந்தது. கால்வாய்கள் வெட்டுவதும், அணைகள் கட்டுவதும், நதிகளின் நீர்ப்பெருக்கை ஏரிகளில் தேக்கிவைத்துக் கொள்ளுவதும், அங்கங்கே மடைகள் வகுத்து அவைகளைக் காலா காலங்களில் திறந்து அடைப்பதும், முதலான காரியங்கள் இந்த இலாக்காவின் வேலையாகும். பஞ்சகாலங்களில் ஜனங்களுக்குக் கைதந்து அவர்கள் கஷ்டங்களை நிவர்த்திசெய்ய முயலுவதும் இந்த மந்திரக் குழாத்தின் கடமையாகத்தான் இருந்திருத்தல்வேண்டும். ஏனெனில்

கருப்புக் காலங்களில் ஜனங்களை எவ்விதப் காப்பாற்றவேண்டுமென்று அர்த்தசாஸ்திரத்தில் வெகு விவரமாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. சமஸ்தானப் பாண்டாரங்களிலுள்ள தானியங்களில் ஒரு பாதியை ராஜாங்கம் செலவுசெய்துவிடாமல் எப்பொழுதும் காஸ்தமாக வைத்துக்கொண்டிருக்க வேண்டியது என்பது முதல் விதி.* சுபிக்ஷகாலங்களிலாகட்டும் துர்ப்பிக்ஷகாலங்களிலாகட்டும் இந்த விதியை அதிக்கிரமிக்கக்கூடாது என்று அரசனுடைய ஆணை இருந்தது. ராஜாங்கமானது பஞ்சத்தில் கஷ்டப்படும் ஜனங்களுக்கு, துர்க்கத கர்மங்கள் என்று பெயரிட்டு வேலை கொடுத்துக் கூலிதந்து காப்பாற்றவேண்டியது என்றும், பயிரிடுவோருக்கு அடுத்த சாகுபடிக்காக விதைதானியம் தரவேண்டியது என்றும், அரசன் கட்டளை இருந்தது. இது விஷயமாக அரசனுடைய கடமைகளைச் சொல்லும்போது, குடிகளைத் தன்னால் பஞ்சத்தினின்று காக்கமுடியாமற்போனால் தன் நாட்டில் ஒருபாகத்தை வேற்றரச னொருவனுக்குக் கொதுவை வைத்து அவனிடமிருந்து கடன் வாங்கியாவது ஜனங்களைக் காக்கவேண்

* அக்காலத்தில் நிலவரி அறுவடைக் காலத்தில் தானியமாகவே செலுத்தப்பட்டு வந்தது.

டும் என்றும், அதுவும் ஏதாவது ஓர் காரணத்தால் அசாத்தியமாய்ப் போய்விட்டால் ஜனங்களைக் கருப்பில்லாத வேறு நாடுகளுக்கு அழைத்துச் செல்ல ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்றும், அர்த்தசாஸ்திரம் கூறும்.

வேலைசெய்துதான் பிழைக்கவேண்டி வந்தாலும், வேலையைத் தேடிப் போய்க் கூலி வேலை செய்வதற்கு மனம் வராத மானிகள் எல்லாக் காலங்களிலும் அனேகர் இருப்பார்கள். அவர்களுக்குச் சந்திரகுப்தன் அரசாக்ஷியில் நல்ல ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஒவ்வொரு ஊரிலும் ராஜாங்கமானது சமஸ்தானத் தறி என்று ஒரு தறி வைத்திருந்தது. அந்தத் தறிக்கு வேண்டுமான நூல் நூற்பதற்காக ஏழை விதவைகளிடத்தும், நொண்டி முடமான ஸ்திரீகளிடத்தும், மற்றும் வேறு காரணங்களால் வெளியில் வர வெட்கப்படும் பேர்களிடத்தும் பெண்கள் மூலமாகப் பருத்தி கொண்டுபோய்க் கொடுக்கும்படி தறி அதிகாரிக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. வேலைக்காகக் கூலியும் புதியவேலைக்குப் பருத்தியும் கொடுத்துவிட்டுச் சமஸ்தானத்தறி வேலைக்காரிகள் நூல்களை வாங்கிக்கொண்டு வந்துவிடுவார்கள். இதுமாத்திரமில்லை. ராஜாங்கமானது அங்கவீனர்களையும், கபோதி

களையும், உழைக்கவே முடியாத பலவீனர்களை யும் தானே தன் செலவில் காப்பாற்றியும் வந்தது. இங்கிலாந்தில் இந்த மாதிரிச் சட்டம் சென்ற பத்துப் பதினைந்து வருஷங்களுக்குள் ளாகத்தான் ஏற்படுத்தப்பட்டது என்று நினைத்துப் பார்க்கும் போது, நமது நாட்டில் இத்தனை காலத்துக்கு முந்தியே அனுசரிக்கப் பெற்று வந்த நாகரீக முறைகள் விஷயத்தில் பெருமைபாராட்டிக் கொள்ள நமக்கு நல்ல பாத்தியமுண்டு.

தற்காலத்தில் நமது நாட்டில் குடிகொண் டிருக்கும் சுத்தமின்மையைக் கண்டு சந்தி தெருப் பெருக்கும் சாத்திரம் கற்போம் என்று ஒரு கவி கூறியுள்ளார். ஆனால் ஆரியாவர்த் தம் எக்காலத்தும் இப்படியே இருந்ததில்லை. தமிழ் நாட்டிலே பராந்தகன், குலோத்துங்கன், ராஜேந்திரன், ராஜராஜன் முதலிய சோழ அரசர்களைப்பற்றி நாம் எழுதும்போது தமிழ் நாட்டின் அக்காலத்து நிலைமையைப்பற்றி வர் ணிப்போம். அவர்கள் காலத்துக்கும் ௧௫00 வருஷங்களுக்கு முந்திய அர்த்தசாஸ்திர காலத்திலும் நாடு நகரங்கள், தெருவு சந்துக ளெல்லாம் சுத்தமாக இருக்கவேண்டியதைப் பற்றி விஸ்தாரமான சட்டங்கள் ஏற்படுத்தப் பட்டிருந்தன. நகரத்தினுள் உள்ள ராஜவீதி

களும் தெருக்களும் நன்றாகக் கட்டப்பட்டு வந்தன. தெருவுகளில் குப்பை முதலிய அசுத்தங்களை எறியக்கூடாது. எரி குளங்களிலாவது பகிரங்கமான இடங்களிலாவது அசுசியான காரியங்கள் செய்யக்கூடாது. பிரேதங்களைக் குறிப்பிட்ட வீதிகள் வழியாகத்தான் கொண்டுபோகவேண்டும். குறிப்பிட்ட ஸ்தானங்களில்தான் அடக்கம் செய்யவேண்டும். தானியங்கள், எண்ணெய்கள், நெய், வாசனைப் பண்டங்கள், ஔஷதங்கள், இவைகளில் கலப்புச் சரக்குகள் கூட்டுபவர்களுக்குக் கடினமான தண்டனைகள் விதிக்கப்பட்டிருந்தன. வெளிப்படையாகக் காரணம் தெரியாத மரணங்கள் எங்கேயாவது நேர்ந்தால் பிரேதங்களை உடனே ஆசுமிருதக பரிசைக்ஷ ஸ்தலம் என்று பேர் வைக்கபபட்ட பிரேதசோதனை ஸ்தலத்துக்கு அனுப்பிவிடவேண்டும் என்று சட்டமிருந்தது. அங்கே பிரேதத்தை நன்றாகக் கூறுசெய்து பார்த்து, சாக்ஷிகளை விசாரித்து எல்லாவற்றையும் குறித்துக்கொண்ட பிறகுதான் அடக்கம் செய்ய உத்தரவு பிறக்கும்.

ராஜாங்கத்தில் எங்கே பார்த்தாலும் தர்ம வைத்தியசாலைகள் கட்டி வைக்கப்பட்டிருந்தன. அவைகளில் மருந்துகளும், பச்சிலைகளும், தைலங்களும், கட்டுவதற்கு வஸ்திரங்

களும் வேண்டிய அளவுக்கு இருக்கின்றனவா என்று அடிக்கடி பார்த்துக்கொள்ளவேண்டியது வைத்தியர்களுடைய பொறுப்பாக இருந்தது. நமது நாட்டில் வைத்திய சாஸ்திரம் வெகு அக்கரையுடன் வளர்க்கப்பட்டு வந்தது என்று குழந்தைகளுக்குக் கூடத் தெரியும். தங்களால் கைவிட்டுவிடப்பட்ட நோயாளிகளையும் ஆரியர் சுவஸ்தம் செய்துவிடுகிறார்கள் என்று அலெக்ஸாந்தருடன் வந்த கிரேக்க வைத்தியர்கள் நமது ஆயுர்வேதத்தைப் புகழ்ந்து கூறியிருக்கிறார்கள். இன்றைக்கும் நல்லபாம்பு விஷத்துக்கு நமது நாட்டு ஔஷதம் தான் சரியாகப் பலிக்கிறது.

நகரங்களில் வீடுகள் அதிக நெருக்கமாக இருக்குமாதலால் அவைகளுக்கு நெருப்பினால் அபாயம் நேருவதற்கு இடமுண்டு. ஆகையால் நெருப்புப்பிடித்தால் அதை அடக்கிவிடுவதற்கும் அணைக்கவும் நகரங்களில் நல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. ஒவ்வொரு வீட்டிலும் ஐந்து குடங்கள், ஒரு தண்ணீர்த் தொட்டி, ஒரு தோண்டி, ஒரு ஏணி, ஒரு கோடாரி, புகையை ஓட்டுவதற்காக முறங்கள், கயிறுகள், கயிறுகளை மாட்டுவதற்குக் கொக்கிகள், மெத்தையிலிருந்து மனிதர்களை இறக்குவதற்குத் தோலால் செய்த 'டோலி'கள்,

கூடைகள், ஆகிய இந்தப் பத்து வகைபால சாமான்களும் இருக்கவேண்டியது என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. இவைகளை வைத்துக்கொள்ளாதவர்கள் வீட்டிற்குள் சமைக்கக் கூடாது, தெருவில்தான் சமைத்துக் கொள்ளவேண்டும்.

சந்திரகுப்தன் கல்வி அபிவிருத்திக்காக ஏராளமான பணம் செலவழித்தான். ஒவ்வொரு கிராமத்திலும் தொன்றுதொட்டுத் திண்ணைப் பள்ளிக்கூடங்கள் இருந்துவந்ததால் அவன் அவைகளைப்பற்றித் தனியாக ஒரு ஏற்பாடும் செய்யவில்லை என்று தெரிகிறது. ஆனால் சாணக்கியன் பயின்ற தக்ஷசிலக் கலாசாலைக்கும், விதர்ப்ப நகரத்துச் சர்வகலாசாலைக்கும், காசி நகரத்துச் சர்வகலாசாலைக்கும், ஏராளமான மானியங்கள் விடப்பட்டன. தக்ஷசீலக் கலாசாலையில் வைத்தியம், ரணசிகிச்சை, சிற்பம், சித்திரம், விக்கிரகம் வார்த்தல், அநேக விதக் கைத்தொழில்கள், இவைகள் உட்படப் பதினெட்டு கலைகள் கற்பிக்கப்பட்டுவந்தன. விதர்ப்ப நகரிலுள்ள கலாசாலைதான் இன்றைக்கு ஆயிரம் வருஷங்களுக்கு முன் விளங்கிய பெரிய ரஸாயனியும் மகாபண்டிதனுமான நாகார்ஜுனனால் மகோன்னத பதவியை அடைந்தது.

ராஜ்ஜியத்தின் ராணுவ பலத்தையும் கப்பல் பலத்தையும் சந்திரகுப்தன் மிகவும் நன்றாய்க் கவனித்துவந்தான் என்று நாம் சொல்ல வேண்டியதில்லை. அவனுடைய தரைப்படையின் தொகை இத்தனை என்று நாம் ஏற்கெனவே சொல்லியிருக்கிறோம்.* துரகவீரன் ஒவ்வொருவன் கையிலும் இரண்டு வேலாயுதங்களிருந்தன. காலாட்படையின் முக்கியமான ஆயுதம் வாள்தான். ஆனால் இதைத் தவிர அவர்களிடம் ஒரு வில்லும் அம்பறாத் தூணியும் ஒரு ஈட்டியும் இருக்கும். இவர்களைத்தவிர, வில்லில் மிகத் தேர்ச்சியுள்ளவர்கள் ஒரு தனிப்படையாகக் கூட்டிவைக்கப்பட்டிருந்தார்கள். அந்தப் படை வில்வீரர் வகுப்பு என்ற பேருள்ள பல வகுப்புகளாக வகுக்கப்பட்டிருந்தது. இந்த வில்வீரருடைய வில் ஒரு ஆள் உயரமிருக்குமாம். அவர்கள் வில்லின் ஒரு முனையைத் தரையிலேயே நிறுத்தி நின்ற நிலையிலேதான் அம்புகளைப் பிரயோகஞ் செய்வார்கள். போர்வீரர்களுக்கெல்லாம் ஓர் ஓர் கவசமும் கேடயமும் இருந்தன.

ராணுவக் காரியங்களையும் கப்பற்படை சம்பந்தமான காரியங்களையும் பழுதறக் கவ

* ௧௮-ம் பக்கம்.

னித்துப் பார்த்துக்கொள்ளுவதற்கென்று முப்பது பேர் அடங்கிய ஒரு சபை பிரத்தியேகமாக இருந்தது. இந்தச் சபையும் நகரச் சபைகள் போலவே ஆறு குழுக்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. முதல் குழு கப்பற்படை விவகாரங்களைக் கவனிக்கும். தரைப்படையின் ஆகாராதி விஷயங்களையும் வசதிகளையும் கவனிக்கவேண்டியது இரண்டாவது குழுவின் பொறுப்பு. மற்ற நான்கு குழுக்களும் தனித்தனியே சதுரங்க சைனியத்தின் ஒவ்வொரு அங்கத்தைச் சேர்ந்த சகல விஷயங்களையும் கண்காணித்து வந்தன. அந்தந்தப் படைகளைச் சேர்ந்த வீரர்கள் வியாயாமங்களும் அஸ்திர சஸ்திரப் பயிற்சியும் தினம் தினம் அப்பியசிக்கிறார்களா என்றும், ஆயுதங்களைச் சரிவரப் பாதுகாத்துச் சுத்தமாக வைத்துக் கொள்ளுகிறார்களா என்றும் பார்த்துக் கொள்ளுவதும், புதிய ஆட்கள் சேர்த்துப் படைகளின் தொகை குறையாமலிருக்கும்படி பார்த்துக் கொள்ளுவதும், தளகர்த்த ஸ்தானத்துக்குத் தகுதியாக இருப்பவர்களைப் பரீக்ஷித்து நியமிப்பதும், இந்தக் குழுக்களின் கடமையாகும். தவிர சைனியத்தை இரு கூறாகப் பிரித்து, இரண்டு கூறுகளையும் ஒன்றுக்கொன்று விளையாட்டாகப் போர்செய்ய

வைத்து, தளகர்த்தரின் ஸாம்பராயிக ஞானத்தையும் வீரர்களின் உற்சாகத்தையும் ஆற்றலையும் சந்திரகுப்தனுடைய ராஜாங்கம் வளர்த்து வந்ததாகவும் தெரியவருகிறது.

கப்பற்படைக் குழுவின் முதற் கடமையானது படைக் கப்பல்கள் குற்றமின்றித் தகுதியாயிருக்கின்றனவா என்றும் போர் செய்ய எப்பொழுதும் சன்னத்தமாயிருக்கின்றனவா என்றும்பார்த்துக்கொள்ளவேண்டியதே. ஸிந்து, ஜீலம், முதலிய வடமேற்குக் கோடியிலுள்ள நதிகளில்தான் படைக் கப்பல்களின் பெரும்பாகம் நிறுத்தப்பட்டிருந்தது. ஏனெனில் அக்காலத்தில் ஆரியாவர்த்தத்தின் எதிரிகள் அந்த ஓரமாக வருவதுதான் வழக்கமாக இருந்தது.

ஆனால் சாதாரண வியாபாரக் கப்பல்களையும் கூட இந்தக் குழுவே கண்காணித்து வந்தது. கப்பல்களும் படகுகளும் பெரும்பான்மை ராஜாங்கத்துக்குத் தான் சொந்தமானவையாக இருந்தன. இதனால் வியாபாரிகளுக்கு அனேக சௌகரியங்களிருந்தன. ஏனெனில், கப்பலின் மராமத்தில் குற்றமிருந்ததனாலாவது மீகாமரின் தொகையில் குறைவு ஏற்பட்டதனாலாவது சாக்குகளுக்கு நஷ்டம் நேர்ந்தால் ராஜாங்கமே நஷ்ட

ஈடு கொடுத்துவிடவேண்டியது என்று பத்தி ஏற்பட்டிருந்தது. கப்பல்களின் தாமதத்தினுலாவது மீகாமநுடைய அஜாக்கிரதையினுலாவது சாமான்கள் சீரழிந்துபோய்விட்டாலும் சொந்தக்காரனுக்கு ராஜாங்கம் நஷ்டம் கொடுத்துவிடும். தவிர, சரக்குகள் வேறு காரணங்களால் சேதமாகிவிட்டாலும் கப்பற் கூலி முழுவதையுமாவது அதில் ஒரு பாகத்தையாவது ஏற்றவாறு ராஜாங்கம் மன்னித்தும் வந்தது.

வியாபாரக் கப்பல்களெல்லாம் பிரயாண யோக்கியமாக இருக்கின்றனவா என்றும், துறைமுகங்களும் இறங்குமேடைகளும் பத்திரமாக இருக்கின்றனவா என்றும், கப்பல்களையும் படகுகளையும் நடத்த அவசியமாக வேண்டிய தொகைக்கு மீகாமர் அந்தந்தக் கப்பல்களிலும் படகுகளிலும் ஏறியிருக்கின்றார்களா என்றும் பார்த்துக்கொள்ள ஒவ்வொரு துறைமுகத்திலும் ஒரு 'கார்பாரி'யும் அநேக வினையாளிகளும் நியமிக்கப்பட்டிருந்தார்கள். தண்ணீரில் மனித உயிருக்குச் சேதம் நேராதபடி காப்பதுதான் 'கார்பாரி'யின் முதல் கடமை. தன் 'சரக'த்துக்குள் எங்கேயாவது கப்பல்கள் உடைந்துபோய்விட்டால், அவன் பிரயாணிகளைக் காப்பாற்றி ஏற்றிக்கொண்டு

வரவும் உடைந்த கப்பல்களைச் சாத்தியமானல் இழுத்துக்கொண்டு வரவும் வேறு கப்பல்கள் அனுப்பவேண்டும். உடைந்த கப்பல்கள் எந்த ஜாதியாரைச் சேர்ந்தவையாக இருந்தாலும் சரி, அவைகளை மராமத்துப் பார்க்கத் துறை முகங்களில் சகலவிதமான வசதிகளும் அவன் ஏற்படுத்தித்தரவேண்டும் என்று சட்டம் இருந்தது.

இன்னும் ஒரு ஏற்பாட்டிலிருந்து சந்திர குப்தன் அரசியலில் அரசனுடைய கடமை களைப்பற்றி என்ன அபிப்பிராயம் இருந்தது என்று நன்கு விளங்குகிறது. அந்த ஏற்பாடு என்ன என்ருல், களவுபோய்விட்ட சொத்துக் களை அரசாங்கமானது உடையவனுக்கு மீட்டுக் கொடுக்க வேண்டியது என்பதே. குடிகளை இதர மனிதர்களால் தீங்கில்லாமல் காப்பாற்றுவ தற்காகத்தான் அரசன் ஏற்பட்டிருக்கிறபடி யாலும், அவனுக்கு ஜனங்கள் இறை வரி செலுத்துவதும் அதுகாரணம் பற்றியேதா ஞதலாலும், களவுபோன பொருள்களைக் கண்டுபிடித்துத் தரவேண்டியதும், அகப்படா மற்போனல் பொருள் இழந்தவனுக்கு அதன் கிரயத்தை ஈடு செய்து கொடுப்பதும் ராஜாங் கத்தின் கடமையாக நினைக்கப்பட்டது. அதற் காகவே ஒவ்வொரு ஸ்தலத்துக்கும் தகுந்தபடி

தலையாரிகளும் காவற்காரரும் போதுமான சம்பளத்தில் நியமிக்கப்பட்டிருந்தார்கள். களவுகளைக் கண்டுபிடிக்காவிட்டால் அவர்களிடமே நஷ்ட ஈடு வாங்கப்படும் என்றும், வேலையில் அசிரத்தையாயாவது, அசாக்கிரதையாயாவது, கள்வர்களுக்கு உடந்தையாயாவது இருந்தால் அவர்கள் தண்டனைக் குள்ளாவதோடு வேலையினின்று நீக்கவும் படுவார்கள் என்றும் ராஜாங்கமானது விதி ஏற்படுத்தியிருந்தபடியால், தலையாரிகளும் காவற்காரரும் தங்களுடைய வேலைகளைக் கருத்தாய்ப் பார்த்துவந்தார்கள். தவிர இந்த உத்தியோகங்கள் பரம்பரைப் பாத்தியமாக அநேக குடும்பங்களிலேயே விட்டுவைக்கப்பட்டுவந்தமையால், அத் தலையாரி முதலியவர்கள் சிறுவயது முதலே அனுபோகம் பெற்று எப்பொழுதும் தங்கள் தங்கள் வேலைகளுக்குத் தகுதியுள்ளவர்களா யிருப்பார்கள். அதுவுமன்றி, காவல்தொழிலில் பெரிய குற்றம்செய்துவிட்டால் அந்தத்தொழில் தங்கள் குடும்பத்தைவிட்டு அகன்றுவிடும் என்கிற பயமும் அவர்களைத் தங்கள் தொழிலில் கண்ணும் கருத்துமாக இருக்கும்படி செய்துவந்தது.

மேலே எடுத்துக்காட்டிய விஷயங்களிலிருந்து, சந்திரகுப்தன் குடையின் கீழ் ஜனங்கள் எத்தனை சுகமாக வாழ்ந்துவந்திருக்க

வேண்டும் என்று படிப்போர் அறிந்துகொள்ளு வார்கள். வயது முதிர்ந்தோர் முதலிய பல வீனர்களுக்கு உபகாரங்கள், பஞ்சங்கள் நேராத படி முன்காப்பு, பஞ்சங்கள் நேர்ந்தவிடத்து ஏழைகளைக் காப்பாற்றல், தர்ம வைத்தியசாலை கள் கட்டிவைத்தல், கப்பற் சேதங்களுக்கு நஷ்டஈடு கொடுத்தல், தொழிலாளிகளுக்கும் எசமானர்களுக்கும் உள்ள விவாதங்களைத் தீர்க்க மத்தியஸ்தர் நியமித்துவைத்தல், இவை முதலிய ஏற்பாடுகள் ஐரோப்பிய ராஜாங்கங் களில் இந்தத் தலைமுறையில் தான் செய்யப் பட்டிருக்கின்றன என்று நாம் காணும்போது, ௨,௨00 வருஷங்களுக்கு முன் ஆரியாவர்த்த மானது எப்பேர்ப்பட்ட நாகரீக நிலைமையி லிருந்தது என்று நாம் ஆச்சரியப்பட வேண்டியதாயிருக்கிறது.

நமது நாட்டைப்பற்றிப் பொய் எழுதி வைக்கவேண்டும் என்கிறதுண்டுதலை இல்லாத அயல்நாட்டவர் சொல்லுகிற விவரங்களிலிருந் தும் சந்திரகுப்தன் அரசாக்ஷியானது உலகத் தின் மகா முகூர்த்தங்களில் ஒன்றாக இருந் திருக்கவேண்டும் என்று ஏற்படுகிறது. ஏனெனில், அவன் நாளில் ஜனங்கள் சிறிதேனும் நாணயம் பிறழாமல் நடந்துவந்தார்கள். பெரிய தொகைகள் கொடுத்து வாங்குகையிலும் கூட

அக்காலத்தில் ஜனங்கள் சீட்டு நாட்டில்லாமல் நம்பிக்கையின் பேரிலேயே கொடுத்து வாங்கி வந்தார்கள். தாங்கள் நியாயமாய்க் கொடுக்க வேண்டிய கடனை யாரும் மறுக்கமாட்டார்கள். நான்கு லக்ஷம் சைனியம் கூடியிருந்த கேவலம் பாசறையில் கூட நூற்றிருபது ரூபாய் பெறு மான தொகைக்கு மேல் என்றைக்கும் களவு போனதில்லை என்று மெகாஸ்தனன் சொல்லு கிறான். நாட்டில் பொய் என்பதே இல்லாம லிருந்தது. நெடுந்தூரம் யாத்திரை போகும் காலத்தில் கூட ஜனங்கள் வீட்டைப் பூட்டி விட்டுப் போவதில்லை. அவர்கள் திரும்பி வரும்போது பொருள்களெல்லாம் வைத்தது வைத்தபடியே இருக்கும்.

இனி, மெகாஸ்தனனுடைய குறிப்புகளி னின்று சில அம்சங்களை அவன் வாக்கிலேயே இங்கு எடுத்துக்கூறுவோம். அவன் சொல்லு கிறான், "இந்தியர் நியாயஸ்தலத்தில் சென்று வழக்குகள் செய்வது மிகவும் அபூர்வம் என் பதிலிருந்து அவர்களுடைய சட்ட திட்டங்கள் எவ்வளவு நியாயமானவை என்றும், அவர்க ளுடைய நாணயம் எவ்வளவு உயர்ந்தது என் றும் இனிது விளங்கும். ஈடுகளைப்பற்றியும், அடைக்கலப் பொருள்களைப் பற்றியும் வழக்கு கள் வருவதேயில்லை. பொருள்களை அடைக்கல

மாக வைக்கும்போது அவர்கள் சாக்ஷிகள் தேடுவதேயில்லை. அவர்கள் ஒருவரை ஒருவர் முற்றிலும் நம்புகிறார்கள். வீடுகளையும் இதர சொத்துக்களையும் அவர்கள் அப்படி அப்படியே போட்டுவிட்டுத் தூரதேசம் செல்லுகிறார்கள்........சத்தியத்தையும் தருமத்தையும் அவர்கள் மிகவும் பெரிய செல்வங்களாக நினைக்கிறார்கள். அதனாலேயே, அபரிமிதமான ஞானம் இல்லாவிட்டால் அவர்கள் விருத்தர்களுக்கு விசேஷமான மரியாதைகள் ஒன்றும் செய்வதில்லை...... அவர்களுக்குள் களவு மிகவும் அபூர்வம்.”

போர்க் காலங்களில் நேரும் விலக்க முடியாத தீங்குகளை ஆரியர் எத்தனை தூரத்துக்குக் குறைத்துவிட்டிருந்தார்கள் என்று அந்த மெகாஸ்தனனை எழுதும் பின்வரும் வார்த்தைகளால் தெரியவரும்:

“மற்ற ஜாதிகளுக்குள்ளே போர் நேரும் காலத்தில் நிலங்களை அழித்துப் பயிர்களையும் சூறையாடிவிடுதல் சகஜமாயிருக்க, இந்தியருக்குள்ளேமாத்திரம் போர்க்களத்துக்கு அருகாமையிலுள்ள குடியானவர்களைக் கூட இருதிறத்து வீரரும் இமிசிப்பதில்லை. பயிரிடுவோரை வருத்துவது பாவம் என்பது அவர்

களுடைய நம்பிக்கை. ஆகையால் போர்வீரர் ஒருவரை ஒருவர் கொலைபுரிந்து கொண்டிருக்கையில் கூட வேளாண்மைக்காரர் கிஞ்சித்தேனும் அபாயம் என்கிற உணர்ச்சியே இன்றிப் பயிர் செய்து கொண்டிருப்பார்கள். படைவீரரும் அவர்களை எவ்விதமாயும் வருத்த மாட்டார்கள். தவிர இந்தியர் பகைவர் நாடுகளில் தீவைப்பதுமில்லை, அங்கேவளரும் மரங்களை வெட்டிச்சாய்த்து விடுவதுமில்லை."

சந்திரகுப்தனுடைய ஆட்சி இத்தனை பெருமையுள்ளதாயும் தார்மீகமானதாயும் இருந்தது. அவனும் பாதகண்டத்துச் சக்ரவர்த்திகளிடம் எதிர்பார்க்கப் படுகிற குணங்களும் ஒழுக்கங்களும் நிறைந்தவனாய் விளங்கினான். ராஜதானியில்யாகங்களும்உற்சவங்களும் வெகு விமரிசையாய் நடத்துவான். தன்னை நாடிவரும் கல்விமான்களுக்கும், கலைஞர்களுக்கும், வினையாளிகளுக்கும், இரவலர்களுக்கும் பரிசுகள் கொடுப்பான். சஸ்திர பரிக்ஷைகளும் போலிப் போர்களும் நடத்தி, கைலாகவமும், தளம் நடத்துவதில் சாமர்த்தியமும் காட்டும் யௌவன வீரர்களுக்கு வெகுமானமும் உத்தியோகப் பெருமைகளும் அளிப்பான். ராஜதானியி லிருக்கும்போது மந்திர சபையில் தானே அக்கிராசனம் வகித்து நிர்வாக காரி

யங்களை நடத்துவான். யுத்தங்கள் நேரும் போது தானே போர்முகத்துக்குச் சென்று சைனியத்தை நடத்துவான். ராஜ்ஜியம் அனைத்திலுமே அவனைப்போல இடைவிடாது வேலை செய்வோர் யாவரும் இல்லை என்னும்படி அத்தனை கடுமையாக உழைப்பான். ஒவ்வொரு நாளும் போத்தாணியின்கண்ணே ஒரு குறிப்பிட்ட நேரத்தில் உட்கார்ந்துகொண்டு குறை வேண்டுவோர் குறையையும் முறைவேண்டுவோர் முறையையும் கேட்பான். இந்தப் போவைக்கு யார் வேண்டுமென்றாலும் தாராளமாய் வரலாம். வலியோரால் நலியப்பட்டவரும், பெரிய அநியாயங்களால் வருந்துபவரும் சக்ரவர்த்தியின் சந்நிதானத்திற்கு நேரே வந்து தங்கள் தங்கள் குறைகளைச் சொல்லிக்கொள்ளுவார்கள். நாம் ஏழையாயிற்றே, நமது எதிரி செல்வமும் செல்வாக்கும் நிறைந்தவனாயிற்றே, நம்முடைய வார்த்தை சமுகத்தில் எங்கே ஏறப்போகிறது என்கிற எண்ணம் யாருக்குமே வராது — அந்தப் போத்தாணியில் பரம ஏழையும் சக்ரவர்த்தியினுடைய ஆப்த நண்பனும் இருவரும் சமம்தான். ஆகையால், நமது அதிக்கிரமம் போத்தாணிக்கு எட்டினால் தண்டனை நிச்சயம் என்கிற எண்ணம் ஒன்றே கூட நிர்வாக அதிகாரிகளையும் செல்வவந்தர்

விட்டால் சந்திரகுப்தனுடைய அரசாட்சியோடு ஒப்பிடக்கூடிய ஆட்சிகள் இதிகாச காலத்தில் இருந்ததில்லை என்றே சொல்லிவிடலாம்.

சந்திரகுப்தன் காலத்தில் ஆரியாவர்த்தத்துக்கும் அதைச் சுற்றுமுள்ள நாடுகளுக்கும் வியாபார விஷயமாகவும் கல்வி விஷயமாகவும் நிரம்பக் கூட்டுறவு இருந்தது. அவன் நாட்களுக்கு வெகுகாலம் முன்னேயேகூட ஆரியாவர்த்தம் கல்விக்கும் ஞானத்துக்கும் பேர் பெற்றிருந்தது. ஸோலன், பிளாத்தன், பிதாகோரன், எரதோத்தன் முதலிய மகா மேதாவிகள் ஆரியர்களின் அறிவையும் ஞானத்தையும் மிகவும் கொண்டாடியிருக்கிறார்கள். அலெக்ஸாந்தர் கிழக்கு நோக்கிப் படையெடுக்குங் காலத்தில், தன்னுடைய குருவும், ஐரோப்பிய சாஸ்திரகர்த்தாக்களுள் அக்கிரகண்ணியனுமான அரிஸ்தோத்தலனை நோக்கி, "உனக்கு நான் என்ன பரிசு கொண்டுவரட்டும்?" என்று கேட்டபோது, அவன் இந்தியாவிலிருந்து சில ஞானிகளை அழைத்து வரவேண்டும் என்று கூறினனும். இந்தப் புகழ் சந்திரகுப்தன் காலத்தில் வளர்ந்ததே ஒழியக் குறையவில்லை. நமது நாட்டாரும் வேற்று நாடுகளுக்குச் சகஜமாய்ப் போய்வந்துகொண்டிருந்தார்கள். அலெக்ஸாந்தரோடு ஸ்ப்ஹீனேஸ் என்றும்

கலனேஸ் என்றும் கிரேக்கரால் பேர்வைத்து அழைக்கப்பட்ட ஒரு பிராம்மணன் பாரஸீகம் சென்றதாகப் புளுதார்க்கு கூறுகிறான். அதன் பிறகு ௲00 வருஷம் கழித்துக் கூட அதேனு நகரத்தில் ஒரு பிராமணன் வசித்து வந்த தாகத் தெரிகிறது. இவ்விதம் நம் நாட்டார் யாதொரு விலக்குமில்லாமல் பல்வேறு நாடுகளுக்கும் சென்று தங்களுடைய வித்தைகளைப் பிறர்க்குக் கற்பித்தும், பிறர்களுடைய வித்தைகளைத் தாங்களும் கற்றும், அவர்களோடு வியாபாரங்கள் செய்தும் வந்தார்கள். அயல் நாட்டாரும் கல்விக்காகவும் வியாபாரங்களுக்காகவும் ஆரியாவர்த்தத்திற்கு எப்பொழுதும் வந்தவண்ணமாக இருப்பார்கள். வேற்றூரார்களைக் கவனித்துக்கொள்ளுவதற்காக ராஜதானிச் சபையிலும், மற்ற நகரச் சபைகளிலும் ஒரு தனிக் குழு நியமிக்கப்பட்டிருந்ததே இதற்குப் போதிய சான்றாகும்.

இவ்வளவு விமரிசையுடன் அரசுபுரிந்து விட்டுச் சந்திரகுப்தன் சுமார் தன்னுடைய நாற்பத்தொன்பதாவது வயதில் துறவுபூண்டு மைசூரிலுள்ள சந்திரகிரியில் ஆறு வருஷம் தவம்செய்துவந்து, கடைசியாகச் சமண பெல்கோளம் என்னும் இடத்தில் தேகத்தை விட்டான் என்று ஒரு ஜயினர் கூறுகிறார். ஆனால்

அந்தக் கதைக்கு ஆதாரம் என்ன என்று அவர் கூறவில்லை. இது வாஸ்தவம் தானே என்று நிச்சயிக்க இப்பொழுது நமக்குப் போதுமான ஆதாரங்களில்லை. ஆனால் சந்திர குப்தன் ஆட்சியின் இருபத்தைந்தாவது வருஷத்திற்குப் பின் அவன் குமாரனான பிந்து ஸாரன்தான் அரசாண்டான் என்று ஏற்படுகிற தாகையால், சந்திரகுப்தன் அந்த வருஷத்தி லேயோ அதற்குச் சற்று முன்னேயோ ஒன்று இறந்து போயிருக்கவேண்டும், அல்லது ராஜ் ஜியாதிகாரத்தைவிட்டு நீங்கியிருக்கவேண்டும் என்பது நிச்சயம்.

சந்திரகுப்தனுக்குப் பிறகு சுமார் ௧௧௫ வருஷங்களுக்கு ஆரியாவர்த்தத்தின் ஏகாதி பத்தியம் அவனுடைய சந்ததியாரிடமே இருந்துவந்தது. சந்திரகுப்தன் தாயாருக்கு முரை என்று பெயரானதால் அவனுடைய வமிசத்துக்கு மௌரிய வமிசம் என்ற பெயர் ஏற்பட்டது.

இனி, ஸ்பூனர் என்னும் ஒரு ஆங்கிலப் பண்டிதர் சந்திரகுப்தன் ஒரு பாரஸீகனே என்றும், பாடலீபுத்திர நகரில் அவன் கட்டு வித்த அரண்மனைகள் பாரஸீகர்களால் பாரஸீக தோரணையிலேயே தான் கட்டப்பட்டன என் றும் சென்ற சில வருஷங்களாக ஒரு வாதம்

செய்துவருகிறார். காலகதியால் அழிந்து போன பாடலீபுத்திர நகர் இருந்த இடத்தைத் தோண்டிப்பார்த்து அங்கே அகப்படுகிற வஸ்துக்களினின்று பழைய மௌரிய நாகரீகம் எத்தன்மையது என்று நிர்ணயித்தல் சாத்தியமா என்று கண்டறிவதற்காகப் பார்ஸீப் பிரமுகரான தாத்தா என்பவர் ஒரு தொகை கட்டிவைத்திருக்கிறார். அந்த ஏற்பாட்டின் பேரில்தான் நமது ஸ்பூனர் பண்டிதர் தற்காலப் பாட்ணு நகரத்துக் கருகாமையிலுள்ள பூமியைத் தோண்டிப் பார்த்துக்கொண்டிருக்கிறார். தோண்டியதில் அகப்பட்ட அசோகனுடைய அரண்மனையின் பாகங்கள் பாரஸீக தோரணை யாய்த்தான் இருக்கின்றன என்று அவர் சொல்லுகிறார். நாம் நேரில் பார்க்காத வரையில் அதைப்பற்றி முடிவான அபிப்பிராயம் கொடுக்க நமக்குப் பாத்தியமில்லை. பார்ஸீப் பிரபுக்களிடம் சம்பளம்வாங்காத நல்லபுராதனச் சின்ன சாஸ்திரி (ஆர்க்கேயாலஜிஸ்டு) களின் அபிப்பிராயம் தெரிகிற வரையில் இவர் சொல்லுகிற விஷயங்களை நம்புகிறதும் அறிவாகாது. தன் சித்தாந்தத்துக்கு ஆதாரமாக அவர் கூறும் மற்ற வாதங்கள் வெகு விசித்திரமாயிருக்கின்றன. அவையாவன: சந்திரகுப்தன் பெயரனை அசோகனுடைய பிரமாண்ட

மான அரண்மனையை ஓரே இரவில் பூதங்கள் கட்டிவிட்டன என்று ஜனங்கள் சொல்லிக் கொள்ளுவதாக அவன் காலத்துக்கு 800 வருஷங்களுக்குப் பின் வந்த உவெந்த ஸாங் கன் என்ற பெயருள்ள சீனதேசத்து மகா பண்டிதன் ஒருவன் எழுதியிருக்கிறான். மகா பாரதத்தில் மகத ராஜ்ஜியாதிபதியான ஜரா ஸந்தன் ஒரு அசுரன் என்று சொல்லப்பட்டிருக்கிறது. தவிர இந்திரப்பிரஸ்தமானது மயன் என்னும் அசுரனால் கட்டப்பட்டது என்றும் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் பாரஸீகத்தில் அக்காலத்தில் கொண்டாடிவரப் பட்ட தெய்வத்தின் பெயர் அஹுரமாஜிதன் * ஆகும். ஆகையால் அசுரனான ஜராஸந்தன் ஆண்ட நாட்டில் அரசுபுரிந்த அசோகனுடைய அரண்மனைகளைக் கட்டிய பூதங்கள் அஹுரமாஜிதனுடைய பக்தர்கள் என்று தெள்ளிதில் ஏற்படவில்லையா? இந்திரப்பிரஸ்தத்தைக்கட்ட மயனை அழைத்தபோது ஆரியர்களுக்கு அந்த மாதிரி வேலை செய்யத் திறமையில்லை என்று ஏற்படவில்லையா? இன்னும் 'அஸுர மயன்' என்று சொல்லிப் பாருங்கள்! அது காதுக்கு

---

* இது அஸுர மஹாந்தன் என்ற ஸம்ஸ்கிருதப் பதத்தின் தற்பவம் என்று எல்லோராலும் கொள்ளப்படுகிறது.

அஹ-ராமாஜிதன் என்னும் பதத்தின் மரூஉப் போலவே தோற்றவில்லையா? சந்திரகுப்தனை பாரஸீகன் என்ற கக்ஷிக்கு ஆதாரம் கூறுவது இன்னும் விநோதமாயிருக்கிறது. மௌரிய வம்சம் என்றபெயர் சந்திரகுப்தன் தாயாரின் பெயரான முரை என்னும் பதத்தினின்றும் வந்தது என்று சொல்லும் வாதம் அறியாமையாம். உண்மை என்னவாமென்றால், பாரஸீகத்தில் மோர்வு, மேரு, மௌர் என்று பலவாறு வழங்கும் ஒரு ஊர் இருக்கிறதாம். அந்தப் பெயருக்கும் மௌரியன் என்னும் பெயருக்கும் எவ்வளவு நெருங்கிய சம்பந்தம் இருக்கிறது பாருங்கள்! இவ்விதமாக ஸ்ரீ ஸ்பூனர் என்பவர் அபூர்வமான வாதங்கள் செய்கிறார். இந்த மாதிரி வாதங்களை ஒப்புக்கொண்டால், ஸர் டாமஸ் மோர் என்னும் ஆங்கில மகான்கூடத் தமஸா நதிக்கரையில் வசித்த ஒரு மௌரியன் என்றும், அதிலிருந்து ஒரு பாரஸீகன் என்றும் ஏற்பட்டுவிடும்!

ஆனால் விளையாட்டை விட்டுவிட்டு யோசித்துப் பார்ப்போம். காலஞ்சென்ற தி. ஸ. நாராயண சாஸ்திரியின் வாதத்தைப் பார்த்தால் சந்திரகுப்தன் நாம் குறித்திருக்கிற காலத்துக்கு ஏறக்குறைய ௧௨00 வருஷங்

களுக்குமுன் இருந்தான் என்று ஏற்படும்.* அது வாஸ்தவமாயிருந்தால் ஸ்ரீ ஸ்பூனர் சொல்லும் வாதத்தை வேறு காரணங்கள் காட்டிக் கண்டிப்பது அவசியமாகும். ஆனால் சாஸ்திரியாரின் வாதம் ஐதிகாசிக உலகத்தில் புறச்சமயமாகவே தானிருப்பதால் அதைக்காட்டி இவர் வாதத்தை மறுப்பது தற்காலம் சம்பாவிதமல்ல. ஆகையால் அதைக் கேவலம் சூசிப்பிக்க மாத்திரம் சூசிப்பித்து விட்டு, நூலில் ஏற்றுக்கொண்டிருக்கிறபடி நம் சந்திரகுப்தன் அலெக்ஸாந்தர் காலத்தவன் என்பதை ஒப்புக்கொண்டு, நவீன பண்டிதர்கள் அங்கீகரிக்கவேண்டிய காரணங்களை மாத்திரம் இங்கு எடுத்துக் காட்டுவோம்.

சந்திரகுப்தன் பாரஸீகனாக இருந்திருக்கும்பக்ஷத்தில், அலெக்ஸாந்தரால் தற்பொழுது தான் கவிழ்த்துவிடப்பட்ட தன்னுடைய ஜன்ம நாட்டைக் கிரேக்கர் வசமிருந்து மீட்பதை விட்டு, அலெக்ஸாந்தரின் தொல்படையாலேயே வெல்லற்கரியவர் என்று நினைத்து விடப்பட்ட ஆரியரோடு போர்புரிந்து ராஜ்ஜியம் ஸ்தாபித்துவிடலாம் என்று கேவலம் நினைந்துதானிருப்பானா? தன்னுடைய ராஜதானியைப் பாரஸீகத்துக்கு ஓரமானதும்,

* அனுபந்தத்தைப் பார்க்க.

தான் முதல் முதல் வென்றதுமான பஞ்சாப் நாட்டில் வைத்துக்கொள்ளுவதை விட்டுப் பாடலீபுரத்தை ராஜதானியாக வைத்துக் கொண்டிருப்பானா? அவனுக்குப் பாரஸீக மந்திரி ஒருவன் கூட இருந்திருக்கமாட்டானா? ஸெலூக்கஸை முறியடித்துக் கலக்கிவிட்ட பிறகும் கூடத் தன் தாய் நாடான பாரஸீகத்தை அவனிடமிருந்து மீட்கக் கொஞ்சமேனும் எத்தனப்பட்டிருக்கமாட்டானா? இந்தச் சமாசாரத்தில் உண்மை லவலேசமாகிலும் இருக்கும் பக்ஷத்தில், மெகாஸ்தனனாவது மற்றக் கிரேக்கச் சரித்திராசிரியர்களாவது பாரஸீக ஆசிரியர்களாவது இதைப்பற்றிப் பிரஸ்தாபித்திருக்கமாட்டார்களா? அல்லது தெரிந்துதான் ஸ்பூனர் பண்டிதருக்குக் கீர்த்தி சம்பாதித்துவைக்கவேண்டுமென்கிற எண்ணத்துடன் ரகசியத்தை வெளியிடாது காத்துவைத்தார்களோ?

இதெல்லாம் என்ன பைத்தியமாக இருக்கிறது? சந்திரகுப்தன் ஆரியனே. அவன் ஸ்தாபித்த ராஜாங்கம் புராதன ஆரிய ராஜாங்கங்களின் வளர்ச்சியே. அவனுடைய பெயர், அவன் மந்திரிகளின் பெயர், அவனுடைய ராஜ்ஜிய தந்திர முறை, அவன் காலத்து ராஜ்ஜிய நிர்வாக உத்தியோகங்களுக்குக் கொடுத்த

பெயர்கள், எல்லாம் அவனுடைய ஆரிய மரபையே காட்டுகின்றன. தவிர, முத்திரா ராக்ஷஸம் என்று ஒரு நாடகம் இருக்கிறதாக நாம் ஏற்கெனவே கூறியிருக்கிறோம். அது அவன் காலத்துக்கு நெடு நாட்களுக்குப்பிறகு எழுதியதுதானாலும், அது எழுதி இப்பொழுது சுமார் க,௪00 வருஷங்களிருக்கும். அதில் சந்திரகுப்தன் நந்த வமிசத்து இளங்கோக்களில் ஒருவன் என்று வியக்தமாகக் கூறியிருக்கிறது. சந்திரகுப்தன் ஆரியனாக இருந்திராதபக்ஷத்தில் அந்த நாடகத்தின் ஆசிரியன் இவ்விதம் உரைத்தே இருக்க மாட்டான். ஆரிய வமிசத்திலேயே பிறந்திருந்தாலும் பௌத்த அரசர்களையும், பௌத்த பண்டிதர்களையும் பௌத்த காவியங்களையுமே பெரும்பாலும் திரஸ்காரம் செய்து விட்ட நம்முடைய கவிகள் ஒரு பாரஸீகனை ஆரியனென்று கூறியிருத்தல் அசாத்தியமே.

ஆகையால் சந்திரகுப்தன் ஆரிய அரசன் என்பதை ஒப்புக்கொண்டு அவனிடத்து நாமெல்லாம் பிதிருபக்தி செலுத்தக் கடவோம். அவன் தமிழ்நாட்டுச் சக்ரவர்த்தி இல்லை என்பது வாஸ்தவம். ஆனால் ராமன், யுதிஷ்டிரன், விக்கிரமார்க்கன், சாலிவாகனன் முதலிய சக்ரவர்த்திகளும் தமிழ் நாட்டரசர்களல்லர். நாம்

அவர்களிடத்துத் தெய்வபக்தி செலுத்துவ தற்குக் காரணம் என்னவென்றால் அவர்கள் இந்தப் புண்ணிய பூமியான பாரத பூமியில் பிறந்து, ஆரிய தர்மத்தையும் ஆரிய நாகரீகத் தையும் நிலைநாட்டி, வீரவாழ்க்கை வாழ்ந்து, நம்முடைய நாட்டுக்குப் புகழைத் தேடிவைத்து இக்காலத்தில் வாழும் நமக்கு ஆரிய தருமமான அரிய செல்வத்தைச் சிதையாமல் காப்பாற்றி வைத்தார்கள் என்பதே. சந்திரகுப்தனும் இத்தகைய பெரிய காரியங்கள் செய்திருப்பத னால் அவனிடத்தும் நாம் அதே மாதிரி பக்தி செலுத்துவோமாக.

சந்திரகுப்த சக்ரவர்த்தி சரித்திரம்
முற்றிற்று

அனுபந்தம்

சமய விஷயத்தில் அகச்சமயம் புறச்சமயம் என்றிருப்பதுபோல இதிகாச விஷயத்திலும் அப்போதைக்கப்போது சில அமிசங்களைப் பண்டிதர்கள் உண்மை என்று தீர்மானித்துவைக்கிறார்கள், வேறு சிலவற்றை உண்மையல்ல என்று தள்ளிவிடுகிறார்கள். அவர்களுடைய தீர்மானங்களைப் பொய்ப்படுத்தக் கூடிய ஆதாரங்களை எடுத்துக் காட்டினால் கூட அவர்களுக்கு ஒன்று கோவம் வந்துவிடுகிறது, அல்லது எடுத்துக்காட்டுகிறவர்மீது அவமதிப்புப் பிறந்துவிடுகிறது.

இந்த வழக்கத்தை நாம் குற்றம் கூறிக் காரியமில்லை. இது பண்டிதர்களுடைய இயற்கை. தவிர, இதில் ஒரு நன்மையும் இருக்கிறது. பண்டிதர் இவை உண்மை என்று நிச்சயம் செய்துவைத்து அவ் உண்மைகளை அரண் செய்து காத்துவராவிட்டால் அருகமில்லாதவர்களெல்லாம் புகுந்து உண்மைகளைத் தாக்கி அழித்துவிடுவதோடு தங்கள் மனதுக்குத் தோன்றியவைகளை யெல்லாம் உண்மைகள் என்று நிலைநாட்ட வந்துவிடுவார்கள். இதிகாச உலகத்தில் அராஜகம் புகுந்துவிடும்.

இருப்பினும், பண்டிதர் கோஷ்டி உண்மை என்று தீர்மானித்துவைத்திருக்கும் கதைகளிற் சிலவற்றை ஒருவர் காரணங்கள்காட்டி மறுத்து, உண்மை வேறு என்று ஸ்தாபிக்கப் பெருமுயற்சி செய்து சிரத்தையோடு முன் வந்தால், அப்பொழுது நடுநிலைமையாக நின்று பழைய தீர்மானங்களைப் புதிய வெளிச்சத்தில் வைத்து ஆராய்ந்துபார்த்து, பழைய தீர்மானங்களை உண்மையாக இருந்தால் அவைகளை அப்படியே வைத்துக்கொள்ளுவதும், அவை தவறு என்று ஏற்பட்டால் தவறு என்று ஒப்புக்கொண்டு அவைகளைத் தள்ளிவிட்டு, புதிதாக உண்மை என்று ஏற்படுபவைகளை அவற்றின் ஸ்தானத்தில் ஏற்றிவைத்துக்கொள்ளுவதும் சாமானிய உண்மைநாடுவோரின் கடமையானதால் இதுவே பண்டிதர்களின் கடமையும் ஆகும் என்று தோன்றுகிறது.

இப்பொழுது, நமது நாட்டின் ஆதி சரித்திரத்தைப்பற்றி ஸர் வில்லியம் ஜோன்ஸ், மாக்ஸ் முல்லர் முதலிய மேனாட்டுப் பண்டிதர்களும் அவர்களைப் பின்பற்றிய ரமேச சந்திர தத்தர், வெ. கோபால ஐயர் முதலிய இந்தியப் பண்டிதர்களும் சில தீர்மானங்கள் செய்து வைத்திருக்கிறார்கள். இத் தீர்மானங்கள் நமது புராணங்களில் சொல்லிய காலவரையறைகளை

யும், ஸித்தமாக வந்திருக்கிற சில சகாப்தக் கணக்குகளையும் தவறு என்று கூறிப் புதிய காலவரையறைகளை ஸ்தாபித்திருக்கின்றனர். சென்ற இரண்டு நூற்றாண்டுகளாக நமது கற்றோர் பழைய சுவடிகளில் 'விசேஷார்த்தங்'கள் பார்ப்பதும், இரட்டுற மொழிதல் முதலிய 'அலங்காரங்'களைக் கண்டு வியப்பதும், முதற் குறள் வாதம் போன்ற வாதங்களும், வாத கண்டனங்களும், கண்டன குடாரங்களும், இவை போன்ற மிகப் பிரயோசனகரமான விவாத அஸ்திர சஸ்திரங்களை ஒருவர் மீது ஒருவர் சரமாரியாய்ப் பிரயோகம் செய்வதுமாக இருந்து லௌகிக, இதிகாச, சரித்திர, சாஸ்திர விஷயங்களை க்ஷணபங்குர விஷயங்களென்று அலக்ஷியம் செய்துவரவே, நமது புராணங்களில் உண்மைகளும் கற்பனைகளும் கலந்திருக்கின்றன என்று நினைக்கும் சாமானியக் கல்வியினரும், புராண இதிகாசங்களையும், கல்வெட்டுக்களையும், பழைய நாணயங்களையும், வேதங்களையும், ஜோதிஷம் முதலிய வேதாங்கங்களையும், இவைபோன்ற மற்ற ஆதாரங்களையும் ஊடுருவிப்பார்த்து ஆராயச் சாவகாசமும், போதிய தனமும், சாமர்த்தியமும் இல்லாதவரும் எல்லாம் இவைகளை ஆராய்ந்து பார்த்துவரும்மேனாட்டுப்பண்டிதர்கள் வாக்கை

அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டி வந்திருக்கிறது. தற்காலத்தில் நமது புராதன சரித்திரமும் இவர்கள் அபிப்பிராயப்படியேதான் எழுதப்பட்டுவருகிறது.

இருப்பினும், சென்னையில் வக்கீலாக இருந்து இவ்வருஷ ஆரம்பத்தில் காலஞ் சென்றுவிட்ட தி. ஸ. நாராயண சாஸ்திரி என்பவர் நமது புராண இதிகாசங்களையும், மேல்நாட்டவர் நம் நாட்டில் கண்டுபிடித்து வெளிப்படுத்தியிருக்கும் தாமிர சிலாசாசனங்களையும், மேல்நாட்டுச் சரித்திராசிரியர் கூற்றுக்களையும் இருபது வருஷங்களாக ஆராய்ந்துபார்த்துச் சங்கரன் காலம் என்று ஒரு நூல் எழுதியிருக்கிறார். அதில், மேல்நாட்டவரும் அவர்களைப் பின்பற்றித் திலகர் முதலான நமது பண்டிதர்களும் நமது கலியுகாதிக் கிரமங்களைப் பற்றிக் கூறுகின்ற வாதத்தைக் கண்டித்து, விஷ்ணு புராணம் முதலிய புராணங்களில் சொல்லப்பட்டிருக்கிற காலக்கிரமங்களும் ராஜ வம்சாவளியும் தான் ஒப்புக்கொள்ளத்தக்கவை என்று அவர் சாதிக்கிறார். இவ்விரண்டு அபிப்பிராயங்களையும் ஆராய்ந்துபார்த்து, உண்மையை நிச்சயித்து, நமது புராண சரித்திரத்தைச் சீர்ப்படுத்துவது இதிகாச பண்டிதர்களின் கடமையாகும்.

சாஸ்திரியார் நூலின் முதல்பாகம் வெளிவந்து மூன்று வருஷமாகிறது. நாலாவது பாகம் வெளிவந்து சுமார் பத்துமாதமாகிறது. ஆனால் இதிகாச பண்டிதர்கள் இவர் சொல்லும் வாதத்தை ஆராயப்புகுந்ததாகவே தெரியவில்லை. மத்தியில் நம்முடைய பாவம், சாஸ்திரியார் காலமாகிவிட்டார். அவர் நூலில் இன்னும் சரிபாதிக்குமேல் அச்சாகாமலிருக்கிறது. அதை வெளிப்படுத்தவும், நூலை நவீன இதிகாசகர்கள் கண்டிப்பார்களானால் வாதத்தை மறுபடி சோதித்துப்பார்த்துச் சமாதானம் கூறியோ கண்டனைகளை ஒப்பியோ உண்மையைச் சித்தாந்தம் செய்யவும் தகுதியுள்ள மனிதர் அவர் பாக்கியாய் வைத்துவிட்டுப் போய்விட்ட வேலையைப் பார்க்க முன்வருவார்களோ என்னவோ தெரியவில்லை.

இவர் இதுவரையில் வெளிப்படுத்தியிருக்கும் பாகங்களில் சொல்லியிருக்கிற வாதங்களை மனச்சாய்வின்றி ஆராய்ந்துபார்த்து உண்மையை நிலைநாட்ட இதிகாச பண்டிதர்கள் முன்வரவேண்டும். கல்வெட்டுக்களை நேரே சென்று சோதிப்பதற்கும், இவர் கூறும் ஜோதிஷ விஷயங்களைச் சரிபார்ப்பதற்கும், புராணங்களில் இவர் கூறும் பாடபேதங்களைக் கையெழுத்துப் பிரதிகளை ஒன்றோடொன்று

வைத்துச் சரிபார்த்து நிச்சயிப்பதற்கும், இன்னும் இதுவிஷயமாகச் செய்யவேண்டுவனவெல்லாம் செய்வதற்கும் நமக்குப் போதிய சௌகரியங்களில்லை. ஆகையால் நாம் நவீன இதிகாச பண்டிதர்கள் நிச்சயம் செய்துவைத்திருக்கிற தீர்மானத்தின்படியே தான் சந்திரகுப்தன் சரித்திரத்தை எழுதவேண்டியிருக்கிறது. நம் நூலிலும் அவ்விதமே தான் எழுதியிருக்கிறோம்.

ஆனல் நம் நூலைப் படிப்போர் சாஸ்திரியாரின் வாதங்கள் தாம் என்ன என்று அறிந்துகொள்ளவேண்டியது அவசியமாதலால் அவற்றை இங்கு சுருக்கமாக எழுதுவோம்:

நமது நாட்டில் பல்வேறு சகாப்தங்கள் வழங்குகின்றன. அவைகளுள் புராதன நூல்களிலும் கல்வெட்டுக்களிலும் அதிகமாகக் காணப்படுபவை பின்வருவன:—கலியப்தம், லௌகீகாப்தம், யுதிஷ்டிரசகம், சககாலம், ஸ்ரீஹர்ஷாப்தம், விக்கிரம சம்வத்சரம், சாலிவாகன சகாப்தம். நமது புராணங்களில் அந்தந்தச் சம்பவங்களுக்குச் சொல்லிய காலவரையறைகள் பொய்யென்றும், அச்சம்பவங்கள் பிற்பட்ட காலங்களில்தான் நடந்தன என்றும் ஐரோப்பிய பண்டிதர் தகுந்த காரணமின்றித் தீர்மானம் செய்துகொண்டு, அவர்க

ளுடைய சித்தாந்தத்தை ஸ்தாபிப்பதற்காக எல்லா வருஷங்களையும் சாலிவாகன சகாப்தத்திலிருந்தே கணக்கிடுகிறார்கள். இதற்கு முக்கியமான தூண்டுதல், உலக சிருஷ்டியாகி இன்று ௫௯௨௩ வருஷங்கள் தானாகிறது என்று அவர்கள் மதக்கிரந்தமாகிற பைபிள் கூறுவதாக ஏற்படுவதால், நமது புராணங்களில் சொல்லியவற்றை யெல்லாம் இந்தக் குறுகிய காலவரையறைக்குள் அடக்கிவிடவேண்டும் என்கிற அவர்களுடைய மனப்பாங்கே.

நமது புராணங்களின்படி, கடைசி மன்வந்தர மகாப்பிரளயத்திற்குப் பிறகு இந்தப் பூமி சிருஷ்டிக்கப்பட்டு ஏறக்குறைய ௧௯௯ கோடி வருஷங்களாகின்றன. இந்தச் சதுர்யுகத்தில் கிருதயுகம் ஆரம்பித்து ஏறக்குறைய நாற்பது லக்ஷம் வருஷங்களாகின்றன. கலியுகம் பிறந்து இன்று ௫௦௨௦ வருஷங்களாகின்றன. ஐரோப்பிய சாஸ்திரிகள் ஆராய்ந்து எழுதியிருக்கும் பூமிநூல் (ஆங்கிலத்தில் ஜியாலஜி), வானசாஸ்திரம் என்னும் இவற்றின் பிரகாரம் உலகமானது கோடானு கோடி வருஷங்களுக்கு முன்னே உண்டாயிருக்கவேண்டும் என்று ஏற்படுகிறது. நமது புராணங்களையும் பைபிளையும் இந்த விஷயத்தில் சீர்தூக்கிப் பார்க்கும்போது நமது புராணங்களில் சொல்லி

யது தான் இவர்கள் கண்டுபிடித்திருக்கிற உண்மைகளுக்கு முரண்படாமலிருக்கின்றது என்று ஏற்படும்.

ஸ்ரீ கிருஷ்ணபகவான் இவ்வுலகத்தை விட்டுச் சென்ற தினத்தில் கலியுகம் பிறந்தது என்று நமது புராணங்கள் கூறுவதோடு, அநேக சாசனங்களும், வம்சாவளிகளும் இந்தக் கலியப்தத்திலிருந்தே கணக்கிடப்பட்டிருக்கின்றன. வழக்கத்திலிருக்கும் ஒரு சகாப்தத்தைக் கற்பனை என்று சொல்லுவது தவறு. நமது இதிகாச புராணங்களில் மகத ராஜ்ஜியத்தை ஆண்ட அரசர்களின் வரிசை சொல்லப்பட்டிருப்பதில் அவர்கள் ஆண்ட காலத்தைத் தொகுத்துப் பார்க்கும்போது அது கி. மு. ௩௩00 - இலிருந்து கி. மு. ௮௩ வரையில் என்று ஏற்படுகிறது. இந்த வரிசையில் சந்திரகுப்த மௌரியன் ஆளத் துவக்கின காலம் மகாபாரத யுத்தத்திலிருந்து ௧௬0௪-ம் வருஷம், அதாவது, கி. மு. ௧௫௩௫-ம் வருஷம் என்று ஏற்படுகிறது. ஏனெனில் மகாபாரத யுத்தம் கலியப்தத்துக்கு ௩௭ வருஷங்களுக்கு முன் நடந்தது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஆங்கிலப் பண்டிதர் நமது சந்திரகுப்தன் கி. மு. ௩௨௨-இல் மகத ராஜ்ஜியத்தை ஆள

ஆரம்பித்தான் என்று சொல்லுவதற்குக் காரணம், ஏறத்தாழ அக்காலத்தில் பஞ்சாபில் படையெடுத்துவந்த அலெக்ஸாந்தரைப்பற்றி எழுதும் ஆசிரியர்களும், ஸெலுக்கஸுடைய தூதனான மெகாஸ்தனனும், தங்கள் காலத்தில் மகதநாட்டில் ஆண்ட க்ஸோந்த்ரமேஸ் அல்லது ஆந்த்ரமேஸ் என்பவனை ஸந்திரகோத்துஸ் அல்லது ஸந்திர கூப்துஸ் என்று பேருள்ள ஒருவன் சிங்காதனத்தினின்று வீழ்த்திவிட்டுத் தான் அச் சிங்காதனத்தின்மீது ஏறினான் என்று சொல்லுகிறார்கள் என்பதே. இதற்குச் சாஸ்திரியார் சொல்லும் ஆட்சேபமாவது: (க) இங்கே சந்திரகுப்தனை மௌரியன் என்று இந்தக் கிரேக்க ஆசிரியர் ஒருவரும் சொல்லவில்லை. (உ) மகத ராஜ்ஜியத்தில் இவர்கள் கூறும் காலத்தில்—அதாவது கி. மு. ௩௨O-ம் வருஷத்துக்குப் பக்கத்தில்—ஆந்திர வமிசத்துக் கடைசி அரசனைச் சந்திரகுப்தன் என்ற பெயருள்ள ஒரு சேனாபதி கொன்றுவிட்டுச் சிங்காதனத்தில் ஏறினான் என்றும், அச் சந்திரகுப்தன் மகனை ஸமுத்திரகுப்தன் என்பான் தன் தகப்பனுக்கு விரோதமாகக் கிளம்பிப் பாடலீபுரத்தைத் தாக்கித் தகப்பனை வீழ்த்திவிட்டுத் தான் சிங்காதனம் ஏறினான் என்றும் புராணங்கள் கூறுகின்றன. (௩) ஆகையால்

சந்திரகுப்த மௌரியனைத்தான் கிரேக்க ஆசிரியர்கள் குறிக்கிறார்கள் என்பது தவறு. குப்த வம்ச ஸ்தாபகர்களான சந்திரகுப்தனையும் ஸமுத்திரகுப்தனையும் பற்றித்தான் அவர்கள் பேசுகிறார்கள் என்று வைத்துக்கொள்ள வேண்டும்.

இந்த அபிப்பிராயத்தை ஸ்தாபிக்க வரும்போது ஸ்ரீமான் சாஸ்திரி நமது வேறுவேறான சகாப்தங்களை மேனாட்டுப் பண்டிதரும் அவர்கள் வழியை அனுசரித்த கீழ்நாட்டுப் பண்டிதரும் எவ்வாறு அம்மானை ஆடுகிறார்கள் என்று காட்டுகிறார். அவற்றில் ஒன்று பின்வருமாறு:

நேபாளத்தில் ஸ்ரீ ஹர்ஷ சம்வத்ஸரம் என்று ஒரு சகாப்தம் வழங்குகிறது. அங்கே சிவதேவ வர்மன் என்ற பெயருள்ள சூரிய வம்சத்து ௨௭-வது அரசன் கலியப்தம் ௨௭௬௪க்குச் சரியான ஸ்ரீ ஹர்ஷ வருஷம் ௧௧௬-இல் ஆளத் துவக்கினான் என்று நேபாள வம்சாவளி கூறுகிறது. கன்யாகுப்ஜநாட்டில் ஹர்ஷவர்த்தன சீலாதித்தியன் என்றொரு சக்ரவர்த்தி கி. பி. ௬௦௬-இல் ஆளத் துவக்கினானகையால், இந்தச் சிவதேவவர்மன் ஆளத் துவக்கின காலம் அந்த ௬௦௬-ம் வருஷத்திலிருந்து எண்ணிய ௧௧௬-ம் வருஷம், அதாவது,

கி.பி.எஉரு என்று மேனாட்டுப்பண்டிதர் கூறு கிறார்கள்.கலியுகக்கணக்குப்படி பார்த்தால் இவ் அரசன் கி. மு. ௲௲அ-இல் அரசாளத் துவக்கி னான் என்று ஏற்படும். ஆனால் மேனாட்டுப் பண்டிதர் தங்கள் வழக்கப்படி நமக்கு மிகவும் நெருங்கிய தேதியாகிற கி. பி. எஉரு - ஐயே ஸ்தாபிக்கிறார்கள். இது வாஸ்தவமாயிருந்தால் கலியுகம் கி. மு. உஎகூச—எஉரு, அதாவது கி. மு. உ0௲கூ-இல் பிறந்தது என்று வைத்துக் கொள்ளவேண்டி வரும். இது நமது ஐதீகத் துக்கு மாத்திரமில்லை, மேனாட்டுப் பண்டிதர் கலியப்தத்துக்குக் கூறும் காலத்துக்கும் கூட முரணாக இருக்கிறது. உண்மையில், கி. மு. சருஎ – இல் ஸ்ரீ ஹர்ஷ சம்வத்ஸரம் என்று ஒரு சகாப்தம் ஆரம்பிப்பதாக நமது புராணங் கள் கூறுவதோடுகூட, முஹம்மது கஜினி காலத்தில் நமது நாட்டுக்குவந்த மகா பண்டித னான அல்பெரூனி என்னும் துருக்கனும் சொல்லுகிறான். இதன் ககசூ—வது வருஷம் கலி உஎகூச – வது வருஷத்துக்கும் கி. மு. ௲௲அ—வது வருஷத்துக்கும் சரியாயிருப்பது குறிப்பிடத்தக்கது.

மேனாட்டவர் சந்திரகுப்த மௌர்யனுக்கும் அலெக்ஸாந்தருக்கும் சமகாலத்துவம் ஸ்தா பிப்பது தவறு என்று சொல்லிவிட்டு, சாஸ்திரி

யார் வேறு ஒரு கால சம்மேளனம் ஏற்படுத்து கிருர். அதாவது, நமது நாட்டில் சககாலம் என்று வழங்கிய சகாப்தம் பாரஸீகத்துக்குக் கிழக்கேயுள்ள ஆன்ஜான் நாட்டாளுன குஸ்ரு (ஆங்கிலத்தில், ஸைரஸ்) என்பவன் மேதியனை வென்று ஒரு பெரிய ஏகாதிபத்தியத்தை ஸ்தாபித்த காலமாகிற கி. மு. ருரு0-ஐக் குறிக்கிறது என்பதே.

இதற்கு அவர் பல ஆதாரங்கள் எடுத்துக் காட்டுகிருர். இவற்றையெல்லாம் இங்கே எழுதுவதாளுல் இந்நூல் விரியும். ஆளுல் பண்டிதரும் மாளுக்கரும் அவருடைய அரிய நூலை வாங்கிப் படித்து அவர் கூறும் ஆதாரங்களை எல்லா வழிகளாலும்சோதித்து ஆராய்ந்து நிச்சயம் செய்ய முயலவேண்டியது அத்தியாவசியம்.

இனி, சந்திரகுப்தனைப்பற்றி எழுதிய இந்நூலில், படிப்போர் முத்திராராக்ஷஸ நாடகத்தின் கதையை எதிர்பார்ப்பது சகஜமாதலால் அவர்களுடைய திருப்திக்காக அதை இங்கே சுருக்கி எழுதுகிறேம்.

இந்த நாடகம் எழுதியது, பிருது மகாராஜன் புத்திரனும் வாதேசுவர தத்தன் பெயரனுமான விசாக தத்தன் என்பவன். நாடகம்

எழுதப்பட்ட காலம் சகம் கூ-வது நூற்றாண்டு என ராப்ஸன் என்னும் ஐரோப்பியப் பண்டிதர் ராயல் ஏஷியாடிக் ஸொஸைடியேடி என்னும் சங்கத்தின் பத்திரிகையின் ககூOO-ம் வருஷத்துத் தொகுதி ருநுரு-ம் பக்கத்தில் நிர்ணயித்தெழுதியிருக்கிறார். இந்த நாடகத்துக்குச் சாணக்கிய தந்திரம் என்று ஒரு பெயரும் வழங்கக் கேட்டிருக்கிறோம். கதை முழுவதும் சாணக்கியனுடைய தந்திரம் தான்:

கடைசி நந்தன் தன்னை அவமதித்த காரணம்பற்றிச் சாணக்கியன் நந்தர்களுடைய பூண்டையே அழித்துவிடுகிறேன் என்றும், நந்தர்களை வேரறுத்து வேறொரு வமிசத்தைப் பாடலீபுரத்தில் நாட்டுகிற வரையில் தன் முன் குடுமியை முடிவதில்லை என்றும் சபதம்செய்து கொண்டு வெளியே புறப்பட்டுவிட்டான். தேசாடனம் செய்துவருகையில் தன்னைப் போலப் பாடலீபுரத்தைவிட்டு ஓடிவந்துவிட்ட சந்திரகுப்த மௌரியனைக் கண்டுபிடித்து, நந்தர்களை அழித்து அவர்களுடைய சிங்காதனத்தில் அவனை ஏற்றிவிடவேண்டும் என்று தீர்மானித்து, பர்வதேசுவரன் என்னப்பட்ட ஒரு மிலேச்ச அரசனுக்கும் அவனுக்கும் நட்பு உண்டாக்கினான். நந்தர்களோடு போர்செய்யப் பர்வதேசுவரன் சந்திரகுப்தனுக்கு உதவிபுரிய

வேண்டியது என்றும், நந்தர்கள் மடிந்ததும் சந்திரகுப்தன் பர்வதேசுவரனுக்கு மகத ராஜ்ஜியத்தில் பாதி கொடுத்துவிடவேண்டியது என்றும் இருவருக்கும் ஒப்பந்தம் நடந்தது. இருவரும் பெரிய சேனையுடன் சென்று நந்தனைத் தாக்கினார்கள். நந்தனுடைய மந்திரியும் வீரனுமான ராக்ஷஸன் பராக்கிரமத்தோடு போர்செய்தும் நந்தன் முறியடிக்கப்பட்டுப் பூண்டோடும் மடிந்தான். பர்வதேசுவரனும் சந்திரகுப்தனும் பாடலீபுரத்தில் ஜயசீலர்களாய்ப் பிரவேசித்தார்கள்.

போர் தன் அரசனுக்கு விரோதமாக முடிந்ததும் ராக்ஷஸன் சந்திரகுப்தனைக் கொலை செய்துவிடச் சூழ்ச்சிகள் புரியலானான். முதலில், ஆலிங்கனம் செய்துகொண்ட மாத்திரத்திலேயே ஆலிங்கனம் செய்தவன் மடிந்து போகும்படியான அத்தனை விஷத்தையுடைய ஒரு தாஸியை ஏவிச் சந்திரகுப்தனை மயக்கிக் கொல்ல அனுப்பினான். ஆனால் சாணக்கியன் அவள் தன்மையை அறிந்து அவளைப் பர்வதேசுவரனிடம் அனுப்பிவிட்டான். பர்வதேசுவரனும் அவளால் இறந்துவிட்டான். இதற்குத் தப்பினால் சந்திரகுப்தனைக் கொல்லுவதற்கு ராக்ஷஸன் வேறு ஏற்பாடுகளும் செய்திருந்தான். சந்திரகுப்தன் அலங்கார மண்ட

பத்துக்கு வரும்போது அவன் ஏறிப்போகும் யானைப்பாகன் அவனைக் கொன்றுவிடவேண்டும் என்றும், அதற்கும் தப்பி அவன் அலங்கார மண்டபத்துக்குவந்தால் தாருவர்மன் என்னும் தச்சன் அந்த மண்டபத்தையே விழும்படி செய்துவிடவேண்டும் என்றும் ஆக்ஞாபித்து விட்டு, ராக்ஷஸன் பர்வதேசுவரன் மகனாகிய மலையகேதுவோடு அவனுடைய தலைநகருக்குப் போய்த் தன் சூழ்ச்சிகளின் விளைபயனைப் பிரதீக்ஷித்துக்கொண்டிருப்பானாயினன்.

ஆனல் சாணக்கியன் முன்ஜாக்கிரதையால் சந்திரகுப்தன் எல்லாக் கண்டங்களுக்கும் தப்பித்துக்கொண்டுவிட்டான். பர்வதேசுவரன் இறந்ததும் சந்திரகுப்தன்மீது எதாவது பழி ஏற்பட்டுவிடப்போகிறது என்று சாணக்கியன் பர்வதேசுவரன் தம்பியான விரோதகனிடம், சந்திரகுப்தன் பர்வதேசுவரனோடு செய்த ஒப்பந்தப்படியே நடக்க, அதாவது மகத ராஜ்ஜியத்தில் பாதியை விரோதகனுக்குக் கொடுத்துவிட, சித்தமாக இருப்பதாகச் சொல்லி, மிலேச்சர்களுடைய சந்தேகத்தை நிவர்த்திசெய்துவிட்டான். ஆனல் சத்துருக்கள் எதாவது சூழ்ச்சி செய்திருப்பார்கள் என்று நினைத்துச் சாணக்கியன் விரோதகனைக் கொண்டே ஆழம் பார்க்க எண்ணி, விரோதக

ணிடம், "உங்கள் உதவி இல்லாதிருந்தால் சந்திரகுப்தனுக்கு ராஜ்ஜிய பதவியே கிடைத்திராதாகையால் நீயேதான் முதலில் அலங்கார மண்டபத்திற்குச் செல்லவேண்டும்," என்று ரகசியமாய்ச் சொல்ல, அவனும் சக்ராதிபதியின் உடை தரித்துச் சக்ராதிபத்தியச் சின்னங்களோடு பட்டத்து யானைமீது ஏறிச்சென்றான். யானைப்பாகனுக்காவது தச்சன் தாருவர்மனுக்காவது சந்திரகுப்தனை நன்றாகத் தெரியாதாதலால் அவர்கள் இருவரும் விரோதகனையே சந்திரகுப்தன் என்று நினைத்துவிட்டார்கள். மண்டபத்தை அணுகுகையில் பாகன் அரசனைக் கொல்லவென்று ஈட்டியை, அதை யாருக்கும் தெரியாதபடி செருகிவைத்திருந்த உள் துவாரமுள்ள தடியினின்று உருவும்போது யானை பயந்து அதிவேகமாய் ஓடி மண்டப வாயில் வரையில் சென்றுவிட்டது. யானை மண்டப வாயிலில் வந்ததும் அதைத் தாருவர்மன் விழச் செய்துவிட்டு ஓடிவிடவேண்டும் என்பது சூழ்ச்சி. ஆனால் யானை வந்த உடன் தாருவர்மன் மண்டபத்தைத் தாங்கிய உத்திரத்தை வீழ்த்தியதும், ஈட்டியால் பாகன் விரோதகனைக் குத்த முயன்றதும் ஏககாலத்தில் ஒத்துக்கொண்டன. பாகன் குத்தப்போகையில் அரசனுடைய அனுசார்கள் அவனை வீழ்த்தி அதம்

செய்துவிட்டார்கள். இதனால் உத்திரம் வீழ்ந்ததும் எதிருச்சையல்ல, சூழ்ச்சிதான், என்று மனிதர் சந்தேகித்துத் தன்னையும் கொன்று தான் விடப்போகிறார்கள் என்று நினைத்து, தாருவர்மன் இனி உயிரை லக்ஷியம் செய்யாமல் சூழ்ச்சியையாவது முடித்துவிடலாம் என்று தீர்மானித்துக்கொண்டு, மண்டபத்துக்கு ஆதாரமாயிருந்த இரும்பு முளையைப் பிடுங்கி மண்டபத்தை அப்படியே விழச் செய்து விரோதகனையும் கொன்றுவிட்டான். விரோதகனுடைய வீரர்கள் தாருவர்மனைக் கல்லாலெறிந்து கொன்றுவிட்டார்கள்.

ஆனால் ராக்ஷஸனுடைய சூழ்ச்சி இதோடு நிற்கவில்லை. இதற்கும் சந்திரகுப்தன் தப்பினால் அவனுக்கு விஷம் கொடுத்துக் கொல்ல அபயதத்தன் என்னும் வைத்தியனையும், அந்தச் சூழ்ச்சியும் நிஷ்பலமானால், சந்திரகுப்தன் சயனிக்கக்கூடிய கிரகத்துக்கு அடியிலுள்ள சுரங்கத்தில் ஒளிந்துகொண்டிருந்து அவன் உறங்குகையில் அவனைக்கொல்லவென்று கொலையாளிகளையும் அவன் அனுப்பினான். இச் சூழ்ச்சிகளும் முன் சூழ்ச்சிகளின் கதியே யாயின. அபயதத்தன் ரசாயனம் என்று சொல்லிச் சந்திரகுப்தனுக்கு விஷத்தைக் கொடுக்கப்போகையில் சாணக்கியன் சந்தே

கித்து அவனையே அதைச் சாப்பிட்டுக் காட்டும்படி சொன்னான். வேறு விதியில்லாமல் அபயதத்தன் அதைச் சாப்பிட்டு அங்கேயே இறந்து வீழ்ந்தான். சுரங்கத்துக் கொலையாளிகளின் கதி இதுவாயிற்று: ஒவ்வொரு இரவும் சந்திரகுப்தன் நித்திரைக்குச் செல்லுமுன் சாணக்கியன் அவன் படுக்கை அறையைத் தானே சோதிப்பது வழக்கம். ஓர் இரவு அவ்விதம் சோதிக்கையில் சாணக்கியன் ஓர் சுவரினுள்ளேயிருந்து சாரி சாரியாய் வந்துகொண்டிருந்த எறும்புகள் வாயில் புதிதாயிருந்த ஆகாரத் துணுக்குகளைக் கவ்விக்கொண்டு செல்வதைக் கவனித்தான். உடனே அறையின் அடியிலுள்ள சுரங்கத்தில் கொலையாளிகள் தாம் இருக்கவேண்டும் என்று ஊகித்து அப்படியே அறையைச் சுற்றித் தீவைக்கும்படி உத்தரவு செய்துவிட்டான் கொலையாளிகளும் சாம்பலாய்ப் போய்விட்டார்கள்.

ராக்ஷஸனுடைய சூழ்ச்சிகளெல்லாம் இப்படி விபலமேயாயின. ஆனால் தோற்கத் தோற்க ராக்ஷஸனுடைய பிடிவாதமும் க்ஷாத்திரமும் வளர்ந்தேவந்தன. இப்பொழுது, மலயகேதுவுக்கும், மலயம், காசுமீரம், குலுத்தம், ஸிந்துநாடு, பாரஸீகம், ஆகிய இவ் ஐந்து நாடுகளின் அரசர்களுக்கும் நட்பு உண்டாக்கி,

அவர்களைக்கொண்டு பாடலீபுரத்தைத் தாக்கிச் சந்திரகுப்தனை அழிக்கப் பெருமுயற்சி செய்து வந்தான்.

ராக்ஷஸன் சந்திரகுப்தனுக்கு விரோதமாய்ச் சூழ்ச்சிகள் செய்துவந்தாலும், சாணக்கியன் அவனுடைய எசமான விசுவாசத்தையும் விடாமுயற்சியையும் ஆள்வினையையும்கண்டுமெச்சி, அவனுடைய முயற்சிகளை உடைத்துவிடுவதோடு நில்லாமல், அவனைச் சந்திரகுப்தனுக்கு மந்திரியாகவும் செய்துவிடவேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு, இந்தக் காரியத்தைச் சாதிக்கத் தன் சாமார்த்தியம் அனைத்தையும் பிரயோகிப்பானாயினான்.

எங்குபார்த்தாலும் சாணக்கியனுடைய ஒற்றர்கள்தான். பாடலீபுரத்தில் நந்தர்களுக்கு அனுகூலமாக யார் யார் இருக்கிறார்கள் என்று பார்க்கப் பலரை ஏவினான். மலையகேதுவின் தலை நகருக்குச் சென்று ராக்ஷஸனுடைய சூழ்ச்சிகளைக் கண்டறிந்து சொல்லப் பலரை அனுப்பினான். இவ் ஒற்றர்கள் அந்தந்தக் காரியங்களுக்கு ஏற்றவாறு மாறுவேஷங்கள் பூண்டு காரியங்களைச் சாதிப்பதில் மகா நிபுணர்களாயிருந்தார்கள்.

இவர்களுள் ஒருவன், யமலோக வாதனைகளைக் காட்டும் படங்களைக் கையில் எடுத்துக்கொண்டு பாடலீபுரத்தில் தெருவு தெருவாய்ப் பாடிக்கொண்டு திரிந்து வருகையில், ஒரு நாள் சந்தனதாசன் என்னும் ஒருவன் வீட்டில் ஒரு ஸ்திரீயின் கையிலிருந்து முத்திரை மோதிரம் ஒன்று நழுவி விழுந்ததையும் அவள் அதைக் கவனியாது உள்ளே சென்றுவிட்டதையும் பார்த்து அம்மோதிரத்தைக் கையிலெடுத்து உற்றுப்பார்த்தான். அதில் ராக்ஷஸனுடைய பெயர் வெட்டியிருப்பதைக் கண்டு, அவன் அது சாணக்கியனுக்குப் பயன்படும் என்று நினைத்து அதைக் கவர்ந்து வந்து அவனிடம் கொடுத்தான். அதைப் பார்த்ததும், ராக்ஷஸனையும் மலயகேதுவையும் பிரித்துவிட அதை உபயோகித்துவிடலாகும் என்று சாணக்கியனுக்குத் தோன்றிவிட்டது. அதுமாத்திரமில்லை. அவனுடைய அபாரமான பிரதிபையில் அதை உபயோகிக்கும் ரீதியும் உடனே ஸ்புரித்துவிட்டது. ராக்ஷஸன் கூடமான பரிபாஷையில் சந்திரகுப்தனுக்கு ஒரு கடிதம் எழுதுவதுபோல எழுதி, அதன் வாசகங்களை ராக்ஷஸனுக்கு மிகவும் ஆப்தனான சகடதாசன் கையால் எழுதி வாங்கிக்கொண்டு வரும்படி சொல்லி, சாணக்கியன் தான்

எழுதிய பிரதியைச் சித்தார்த்தகன் என்ற தன் ஒற்றனிடம் கொடுத்தான். அவன் சகடதாசனை ஒற்றுப்பார்ப்பதற்காக அவனோடு நெருங்கிப் பழகிக்கொண்டுவருபவனாத லால் இக்காரியத்தை வெகு சுலபமாய் முடித்துத் தந்துவிட்டான். அந்தக் கடிதத்தின் வாசகம் கூடமாயிருந்தாலும், அது ராக்ஷஸனால் எழுதப்பட்டது என்றும் சந்திரகுப்தனுக்கு அனுப்பப்பட்டது என்றும் ஏற்படப்போகிறது என்ற மர்மத்தை அவன் அறியானையாலும் சகடதாசன் சந்தேகம் கொள்ளாமல் சித்தார்த்தகன் கேட்டுக்கொண்டபடியே அக்கடிதத்தை எழுதி அவனிடம் கொடுத்துவிட்டான். சாணக்கியன் அதை வாங்கி அதற்கு ராக்ஷஸனுடைய மோதிரத்தால் முத்திரையிட்டு வைத்துக்கொண்டான்.

இனி இந்தக் கடிதத்தை மலையகேதுபார்க்கும்படியும் அதை ராக்ஷஸன் எழுதியதுதான் என்று நம்பும்படியும் செய்துவிட்டால் மலயகேதுவுக்கு ராக்ஷஸன்மீது அவநம்பிக்கை பிறந்துவிடுமாதலால் சாணக்கியன் அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்வானாயினான்.

முதலில் ராக்ஷஸன் சிநேகிதனான சகடதாசனைச் சிறைசெய்து, ராஜத்துரோகத்துக்காக அவனுக்குக் கொலைத் தண்டனை விதித்து,

அவனை உடனே கொலைக்களத்துக்குக்கொண்டு போகும்படி வலலாளர்களுக்கு உத்தரவு செய்துவிட்டு, தனது ஒற்றனேயான சித்தார்த்தகனை ராஜத்துரோகி எனப் பறையறைவித்து, அவன் தேசத்தைவிட்டு உடனே ஓடிப்போய் விடவேண்டியது என்று உத்தரவும் பிறப்பித்துவிட்டான். பிறகு சித்தார்த்தகனைத் தனியில் அழைத்து அவனிடம், அவன் (சித்தார்த்தகன்) கொலைக் களத்துக்குச் சென்று, தான் சாணக்கியன் உத்தரவுப்படி அவர்களைத் தாக்கப் போவதாகவும், தான் தாக்கும்போது அவர்கள் தன்னை எதிர்க்காமல் ஓடிவிடவேண்டும் என்றும் கொலையாளிகளிடம் ரகசியமாய்ச் சொல்லிவிட்டு, அவர்களைத் தாக்கிச் சகடதாசனையும் தப்புவித்துக்கொண்டு அவனோடு கூட மலயகேதுவிடம் சென்றுவிடவேண்டியதென்றும், காலமறிந்து மேலே சொன்ன கடிதம் மலயகேதுவின் கையில் அகப்படுமாறு செய்துவிடவேண்டுமென்றும் சொல்லி அக்கடிதத்தை அவனிடம் கொடுத்து அனுப்பிவிட்டான்.

தவிர, ஜீவசித்தி என்ற பேருள்ள ஒரு பௌத்த சந்நியாசி ராக்ஷஸனுக்கு நண்பனாக இருப்பது தெரிந்து, அவனைத் தனக்காக ஒற்றுப்பார்க்கச் சம்மதிக்கச்செய்து, அவனுக்குச்

சில ரகசியமான பாடங்களைச் சொல்லிக் கொடுத்து மலையகேதுவினிடம் செல்ல அனுப்பிவிட்டு, அவன் ராக்ஷஸனுக்கு உடந்தையாயிருப்பவனாதலால் அவன் பாடலீ புரத்தில் அரை க்ஷணம் கூட இருக்கக்கூடாது என்று பறையறைவித்துவிட்டான்.

இது மாத்திரமில்லை. மலையகேதுவின் பிரதான காரியஸ்தர்களில் ஒருவனான பாகு ராயணன் என்பவனுக்குப் பணம் முதலியன தந்து சாணக்கியன் அவனைத் தன் மனிதனாக ஆக்கிக்கொண்டு அவன் மூலமாகவும் மலைய கேதுவின் ரகசியங்களையெல்லாம் கறந்து வாங்கிவந்தான்.

இந்த ஏற்பாடுகளெல்லாம் செய்தான பிறகு, சாணக்கியன் சந்தனதாசனைத் தருவித்து, "ராக்ஷஸனுடைய மனைவி முத லானவரை உடனே ராஜாங்கத்தினிடம் ஒப்பு வித்துவிடாமற்போனால் உன்னையும் ராஜத் துரோகியாகக் கருதிச் சிரச்சேதம் செய்து விடுவேன்," என்று பயமுறுத்தினான். ஆனால் சந்தனதாசன் சாணக்கியனுக்குப் பயந்து ஏற் கெனவே அவர்களை வேறு ஒருவனிடம் ஒப்பு வித்துவிட்டு வந்திருந்தானாகையால் இப் பொழுது பயமின்றி, "நான் கொலையுண்டா லும் உண்மையை ஒழிய ஒரு சிநேகித

னுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்யமாட்டேன்,'' என்று கண்டிப்பாய்ச் சொல்லிவிட்டான். சாணக்கியனும் அவனுடைய பெருந்தகைமையைக் கண்டு மெச்சி, இப்பேர்ப்பட்டவனைத் தன் அரசனுக்கு அனுசரனாக்கவேண்டும் என நிச்சயித்துக்கொண்டு, ஆனால் ராக்ஷஸனைப் பாடலீபுரத்துப்பக்கம் இழுக்க அவனைக் காலக்கிரமத்தில் கறவைக்கன்றாக உபயோகப் படுத்தலாகும் என்று கருதி அவனைச் சிறைச் சாலையில் போட்டுவிட்டான்.

இந்த ஏற்பாடுகளின்படியே எல்லாம் நடந்தது. சந்தனதாசன் குடும்பசகிதம் சிறைச்சாலையில் வைக்கப்பட்டுவிட்டான். சித்தார்த்தகன் கொலையாளிகளை வெருட்டிவிட்டுச் சகடதாசனை விடுவித்துக்கொண்டு அவனோடு ராக்ஷஸனிடம் சென்றுவிட்டான். ஜீவசித்தியும் மகத நாட்டைவிட்டு மலயகேதுவின் தலைநகர் சேர்ந்துவிட்டான்.

அங்கே ராக்ஷஸன் மலயகேதுவின் கூட்டுச் சைனியத்தைச் சந்நத்தமாக்கிக்கொண்டும், மலயகேதுவின் உற்சாகம் குன்றாமலிருக்கும்படி பார்த்துக்கொண்டும், பாடலீபுரத்துக்குத் தன் ஒற்றர்களை அனுப்பிச் சத்துருவின் சமாசாரங்களை அறிந்துகொண்டும், சாணக்கியனுக்கும் சந்திரகுப்தனுக்கும் மனஸ்தாபம் உண்டாக்க

அ

ஏற்பாடுகள் செய்துகொண்டும் இருந்தான். சகடதாசனுக்குக் கொலைத் தண்டனை விதிக்கப் பட்டதும், சந்தனதாசன் குடும்பத்தோடு சிறையிலடைபட்டிருப்பதும், தான் சந்திரகுப்தனைக்கொல்லச்செய்த சூழ்ச்சிகளெல்லாம் விபலமாகிவிட்டதும் ஆகிய இச்சமாசாரங்களெல்லாம் அவனுக்கு எட்டிவிட்டன. இப்படி இருக்க, சகடதாசன் அவனிடம் ஒரு நாள் திடீரென வரவே, அவன் அவனை அன்போடு தழுவி, அவன் கொலைக்குத் தப்பிவந்த கதையை ஆதியோடந்தமாய்ச் சொல்லும்படி கேட்டான். அதற்குச் சகடதாசன் தன்னோடு வந்திருந்த சித்தார்த்தகனைக் காண்பித்து, இந்த நண்பனுடைய உதவியால்தான் தப்பிப் பிழைத்தேன் என்று சங்கதிகளைச் சொன்னான். ராக்ஷஸன் சித்தார்த்தகனை நந்தர்கள் கக்ஷியைச் சேர்ந்தவன் என்று நம்பிவிட்டான். தவிர, தன் நண்பனைத் தப்புவித்ததற்காக, தான் மலயகேதுவிடம்பரிசுபெற்ற ரத்தினாபரணங்களைக் கழற்றி அவனுக்குப் பரிசாகத் தரப்போனான். ஆனால் எப்படியாவது ராக்ஷஸனுடைய முத்திரை மோதிரம் அவனிடமே போய்ச்சேரும்படி செய்யவேண்டியது என்று சாணக்கியன் சித்தார்த்தகனுக்கு உத்தரவிட்டிருந்தமையால், சித்தார்த்தகன் சாமர்த்தியமாய், "நான் இந்த அறியாத ஊரில் தாங்கள் தயவோடு தரும்

இந்த ஆபரணங்களை எப்படிக் காப்பேன்? உத்தரவானால் இந்த மோதிரத்தால் முத்திரை யிட்டு அவைகளைத் தங்களிடமே வைத்திருக்க விரும்புகிறேன்," என்று சொல்லி, அவன் சம் மதித்ததும் அந்நகைகளை ஒருபொட்டணமாகக் கட்டி முத்திரையுமிட்டான். முத்திரையைப் பார்த்ததும் ராக்ஷஸன், மோதிரம் தன்னது என்று கண்டு, இது உனக்கு எப்படிக் கிடைத் தது என்று சித்தார்த்தகனைக் கேட்டான். அதைச் சந்தனதாசன் வீட்டு வாயிற்புறத்தில் கண்டெடுத்ததாகச் சித்தார்த்தகன் சொன்ன தால் ராக்ஷஸன் அவன்மீது யாதொரு சந்தேக மும் கொள்ளாததோடு, அவனைத் தன் சினேகி தனைத் தப்புவித்துவிட்டவன் என்றும் சாணக்கியனால் தேசோத்வாசனம் செய்யப் பட்டவன் என்றும் கருதி அவனைத் தன் னிடமே வைத்துக்கொண்டுவிட்டான்.

சந்திரகுப்தனையும் சாணக்கியனையும் பிரிக்க என்று, ராக்ஷஸன் ஒருகவியைச் சாணக் கியனுடைய கர்வத்தைக் குறிக்கும்படியான கூடார்த்தமான சுலோகங்கள் கவனம் செய்து சந்திரகுப்தன் காதில் படும்படி பாடச் சொல்லி அனுப்பினான். ஆனால், தனக்கும் சந்திர குப்தனுக்கும் மனஸ்தாபம் உண்டாயிருப்பது போலத் தற்காலத்துக்கு நடிப்பது சாணக்கிய

னுடைய பெரிய தந்திரத்தில் ஒரு அமிசமான தால்* கவி, 'சிங்கமானது வீரியத்தை விட்டுப் பிறர் தன் நகங்களைப் பிடுங்குவதற்கு இடம் கொடுக்கலாமா?' என்று சந்திரகுப்தன் காது கேட்கப் பாடியதும், சாணக்கியன் இது ராக்ஷஸனுடைய தந்திரம் என்று ஊகித்தறிந்து கொண்டு, சந்திரகுப்தனுக்குக் கண்ணைக் காட்டிவிட்டான். சந்திரகுப்தனும், முன்னே இருவரும் செய்துகொண்ட சங்கேதப்படி, ராக்ஷஸனைப் புகழ்ந்தும் சாணக்கியனை இழித்தும் பேசிச் சாணக்கியனை மந்திரிஸ்தானத்தை விட்டு நீங்கிவிடும்படி ஆக்ஞாபித்துவிட்டான்.

காலக்கிரமத்தில் சாணக்கியனுடைய சூழ்ச்சிகளெல்லாம் பக்குவமாக ஆரம்பித்தன. சாணக்கியனால் அனுப்பப்பட்டுச் சந்திரகுப்தனுக்கு விரோதிகள் என்று சொல்லிக்கொண்டு நாள்தோறும் மலயகேதுவிடம் வந்துகொண்டிருந்த பிரபுக்களெல்லாம் ராக்ஷஸனுக்குத் தெரியக்கூடாது என்று சொல்லிவிட்டே பல ரகசிய விஷயங்களை மலயகேதுவிடம் சொல்லி வந்ததனால் அவனுக்கு ராக்ஷஸன் மீது மெல்லச் சந்தேகம் பிறக்கத் துவக்கிற்று. பாகுராயணனும், சாணக்கியன் சொல்லிக் கொடுத்தனுப்பிய படி, 'ராக்ஷஸனுக்குச் சாணக்கியன் மீது தான்

---

* இதன் சூக்ஷுமம் பின்னே தெரியவரும்.

க்ஷாத்திரமாணபடியாலும், ராக்ஷஸன் நந்த வமிசத்துக்குப்பரம்பரை மந்திரியாகையாலும், சந்திரகுப்தன் நந்த வமிசத்து இளங்கோவான தாலும் சாணக்கியனுக்கும் சந்திரகுப்தனுக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டுவிட்டால் ராக்ஷஸன் சந்திரகுப்தனிடம் போய்விடுவானோ என்னவோ?' என்று சமயம் வாய்த்தபோதெல்லாம் சொல்லிக்கொண்டே வந்து, மலையகேதுவின் மனதிலுள்ள ஐயத்தைப் பன்மடங்கு அதிகப்படுத்திவிட்டான். இந்தச் சூழ்ச்சிக்கு அடிப்படைபோட நினைத்தன்றோ சாணக்கியன் சந்திரகுப்தனோடு மனஸ்தாபப் பட்டுவிட்டதாகப் பாசாங்கு செய்தது!

இப்படி ஐயப்பட்ட மனதோடு மலையகேது ஒரு நாள் ராக்ஷஸன் வீட்டுக்குச் சென்றான். அங்கே ராக்ஷஸன் பாடலீபுரத்திலிருந்து திரும்பிவந்த தன் ஒற்றனோடு பேசிக்கொண்டிருப்பதைக் கண்டு மலையன் மறைந்து நின்று ஒட்டுக்கேட்பானாயினான். ஒற்றன் சந்திரகுப்தனுக்கும் சாணக்கியனுக்கும் நடந்த சம்வாதத்தையும் பாடலீபுரத்தில் நடந்த மற்ற விஷயங்களையும் சவிஸ்தாரமாகக் கூறினான். சந்திரகுப்தன் ராக்ஷஸனைப் புகழ்ந்தான் என்றும் சாணக்கியனை மந்திரி ஸ்தானத்தினின்று நீக்கிவிட்டான் என்றும் ஒற்றன் கூறு

லையில் ராக்ஷஸன், 'இனிச் சந்திரகுப்தன் நம் கைக்குள் அகப்பட்டுவிட்டான்,' என்று சொல்லிக்கொள்ளவே ஏற்கெனவே ஐயப்பட்ட மலயகேதுவின் மனவேறுபாடு இன்னும் அதிகமாகிவிட்டது. இருப்பினும், அவன் தன் சந்தேகத்தைக் காட்டிக்கொள்ளாமல் ராக்ஷஸன் சொல்லிய விதமே சேனையை ஆயத்தப் படுத்திப் பாடலீபுரத்தை நோக்கித் தண் டெடுத்துவிட்டான்.

சாணக்கியன் குறித்த சமயம் வந்துவிட்டது. சித்தார்த்தகன், தான் ராக்ஷஸனிடம் முத்திரையிட்டு ஒப்புவித்திருந்த ஆபரணப் பொட்டணத்தைக் கேட்டு வாங்கிக்கொண்டு, சாணக்கியன் சூழ்ச்சியால் எழுதுவித்து ராக்ஷஸன் முத்திரையால் முத்திரித்துமிருந்த கடிதத்தையும் எடுத்துக்கொண்டு பாசறையைவிட்டுப் புறப்பட எத்தனித்தான். சேனைத்தலைவருடைய எழுத்து மூலமான உத்தரவின்றி யாரும் பாசறையின் காவலைக் கடக்கக்கூடாது என்று சித்தார்த்தகனுக்குத் தெரியும். ஆனால் இந்தத் தடையங்களோடு மலயகேதுவின் அதிகாரிகளிடம் அகப்பட்டு ராக்ஷஸனைக் கெடுத்துவிடவேண்டும் என்கிறதுதான் அவன் கருத்தாகையால், அவன் திருட்டுத்தனமாகச் செல்லுகிறவன் போல நடித்துக்கொண்டு அதிகாரிகள் கவனிக்

கும்படியான வழியாலே கடந்து செல்ல எத்த
னிக்கையில் அகப்பட்டுக்கொண்டுவிட்டான்.

இதன் மத்தியில் பாகுராயணனும் ஜீவ
சித்தியும் ஒருவர்க்கொருவர் பேசிக்கொண்டு,
மலையகேதுவின் காதில் படும்படி ராக்ஷஸ
னுடைய விவகாரத்தைப்பற்றிப் பேசலானார்கள்.
பாகுராயணன் ஜீவசித்தியைப் பார்த்து,
'ராக்ஷஸனுடைய ஆப்த நண்பனே, வருக,'
என்றழைக்க, ஜீவசித்தி, 'அவன் பெயர் இனி
என் காதில் விழாமலிருப்பதற்காகவே நான்
இவ்விடத்தைவிட்டுப் போக உத்தேசித்திருக்
கிறேன்,' என்றான். பாகுராயணன் இத்தனை
நட்பாயிருந்தவர்கள் பிரியக் காரணமென்ன
என்று தூண்டிக் கேட்டான். அதற்கு ஜீவ
சித்தி, தானும் ராக்ஷஸனும் சேர்ந்துதான் பர்வ
தேசுவரனைக் கொல்லுவதற்காகத் தாசியை
அனுப்பியதாகவும், ராக்ஷஸனுக்கு அது காரண
மாகச் சந்திரகுப்தனால் கிடைத்த லாபத்தில்
தனக்கும் ஒருபாகம் கிடைத்ததாகவும், ஆனால்
ராக்ஷஸனுக்கு இப்பொழுது தன்னைக் கண்
டாலே ஆகாதுபோய்விட்டது என்றும், இப்
பொழுது தான் அந்தக் கொலை புரியக் காரண
மாயிருந்ததை நினைத்துப் பச்சாதாபப் படுவ
தாகவும் சொல்லிவிட்டு அவ்விடத்தை விட்டுப்
போய்விட்டான்.

இதையெல்லாம் மறைவிலிருந்து கேட்டுக்கொண்டிருந்த மலயகேதுவுக்கு ராக்ஷஸன் மீது கொடிய கோபம் பிறந்துவிட்டது. ஆனால் மகத ராஜ்ஜியத்தை வசப்படுத்துகிற வரையில் அவனைக்கொல்லுவது தந்திரத்துக்கு விரோதம் என்று பாகுராயணன் சொல்ல, மலயகேதுவும் அது நியாயமென நினைத்துத் துவேஷத்தை மனதிலேயே அடக்கிக்கொண்டுவிட்டான். அந்த நிமிஷத்தில் ஒரு சேவகன் சித்தார்த்தகனைப் பிடித்துக்கொண்டு வந்து அரசன் சமுகத்தில் நிறுத்தினான். அவனைப் பாகுராயணன் தகுந்த கேள்விகள் கேட்டு அவன் ராக்ஷஸனுடைய அனுசரர்களில் ஒருவன் என்று காட்டிவிட்டு, ஏன் உத்தரவின்றிக் காவலைக் கடந்து சென்றாய் என்று மீட்டும் கேட்க, அவன் ஒரு அவசர காரியமாய்ப் புறப்பட்டேன் என்று சொல்லிவிட்டுத் தான் வைத்திருந்த கடிதத்தின் நுனி மலயகேது கண்ணில் படும்படி செய்துவிட்டான். மலயகேது உடனே சந்தேகப்பட்டுப் பாகுராயணனைக் கடிதத்தை வாங்கிப் படிக்கும்படி சொன்னான். அவனும் அதில் ராக்ஷஸனுடைய முத்திரையிடப்பட்டிருக்கிறது என்ற விஷயத்தைத் தெரிவித்துப் பின்வருமாறு படித்தான்:

“மகா சமர்த்தனான ஸ்ரீமந்தருக்கு விசுவாசாருகனான அடியேன் தெரிவித்துக்கொள்ளுவ

தாவது:— நமது பிரதான சத்துரு மடிந்து விட்டதிலிருந்து தேவரீர் எனது வார்த்தைகளைப் பூரணமாய் நம்புவீர். சமுசயம் முற்றிலும் அறும்பொருட்டு இக்கடிதத்தைச் சமுகத்துக்கு அனுப்புகிறேன். காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்க. கட்சி மாற்றத்துக்காகப் பேசியுள்ள பிரயோசனங்களைக் குறைவறச் செய்தருள்க. அப்பொழுது இந்நண்பர் நமது பக்கம் சாய்ந்துவிடுவார்கள்: இதுவரை அவர்களுக்கு நிழல் தந்த வீட்டைத் தகர்த்துவிட அவர்கள் ஒன்றுகூடிவிடுவார்கள். அவர்கள் எதிர்பார்க்கும் பிரதிப்பிரயோசனத்தைப் பற்றித் தங்களுக்கு நினைவுறுத்தவேண்டாம்: சிலருக்குப் பூமிவேண்டுமாம்; மற்றவர்கள் ஸ்வர்ணமும், யானைகளும், கொள்ளையும் விரும்புகிறார்கள். விலைமதிக்க முடியாத மூன்று ரத்னங்களும் கிடைத்தன. அடியேனுடைய நன்றியைக் காட்டுவதற்காகச் சில மணிகள் சமுகத்துக்கு அனுப்பியிருக்கிறேன். அவை அற்பமாயிருப்பினும் சித்தார்த்தகன் எடுத்து வருவதனாலேயே அவற்றைத் தேவரீர் மதிப்பீர் என நம்புகிறேன். இதிலுள்ள கூடமான விஷயங்களைச் சித்தார்த்தகனே விளக்குவான்.”

இக்கடிதத்தைச் சேர்ந்த விஷயங்கள் ஒன்றும் தனக்குத் தெரியா என்று சித்தார்த்தகன்

சாணக்கியனுடைய பாடத்தின் பிரகாரம் பாசாங்குசெய்துவிட்டு, பழுக்கப் பழுக்கச் சவுக்கடி வாங்கிய பிறகு சாணக்கியன் சொல்லிக் கொடுத்திருந்த கதையை ஒப்பித்துவிட்டான். அதாவது, குலூத்த, மலைய, காசுமீர நாட்டரசர்கள் மலையகேதுவின் ராஜ்ஜியத்தில் ஒரு பாகத்தை விரும்புகிறார்கள் என்றும், ஸிந்து, பாரஸீக நாட்டரசருக்கு யானைகளும் சுவர்ணமும் வேண்டும் என்றும், ராக்ஷஸனுக்குச் சாணக்கியனை மந்திரசபையினின்று நீக்கியதே போதுமான உதவி என்றும் சந்திரகுப்தனிடம் சொல்லும்படி ராக்ஷஸன் தனக்குக் கட்டளையிட்டான் என்று சொல்லிவிட்டான்.

விவகாரம் முடிந்துவிட்டது. ராக்ஷஸனைத் தருவித்து மலையகேது கடிதத்தையும் அடிபடும்போது சித்தார்த்தகன் நழுவவிட்ட ஆபரணப் பொட்டணத்தையும் காண்பித்து இதெல்லாம் என்ன என்று வினவினான். என்ன செய்வான் ராக்ஷஸன்! எல்லாச் சாக்ஷியங்களும் அவனுக்கு விரோதமாக இருந்தன. சித்தார்த்தகனுக்குப் பரிசாகக் கொடுத்த ஆபரணங்கள், சகடதாசன் கையெழுத்து, தன்னுடைய முத்திரை, எல்லாம் அவனுக்கு விரோதமாகப் பேசின. சாணக்கியன் இந்த நேரத்தில் உதவ என்று இன்னொரு சூழ்ச்சியும் செய்துவைத்

திருந்தான். பர்வதேசுவரான் இறந்த பிறகு அவன் கிரீடத்திலிருந்து எடுத்த மூன்று ரத்தினங்களை ஒரு ஒற்றன் மூலமாக அனுப்பி ராக்ஷஸனிடம் காட்டி அவனை வாங்கும்படி செய்திருந்தான். அந்த மூன்று ரத்தினங்களைப் பற்றித்தான் கடிதத்திலும் பிரஸ்தாபம். உயர்ந்த ரத்தினங்களாகையால் ராக்ஷஸன் அவற்றில் ஒன்றை அணிந்துகொண்டே மலையகேதுவிடம் வந்திருந்தான். அது கடிதத்திலுள்ள விஷயங்களை மெய்ப்பித்ததோடு, மலயகேதுவுக்குக் கொலையுண்டு இறந்த தன் தகப்பனுடைய ஞாபகத்தையும் ஜீவசித்தி சொல்லிய வார்த்தைகளையும் நினைவூட்டி விட்டது. ஆகையால் அவன் ராக்ஷஸனைக் காய்ந்துகொண்டு, "என் தகப்பனை நீதானே, பாவி, கொன்றாய்?" என்று கேட்டுவிட்டு, "உன் இஷ்டப்படி நீ சந்திரகுப்தனிடம் செல்லலாம்; ஆனால் உன் உதவியிருந்தும் நம் சைனியத்தை அவனால் எதிர்க்க முடியாது," என்று சொல்லிவிட்டுப் படையோடு புறப் பட்டுவிட்டான். ஆனால் புறப்படுமுன் தன் துணைவரான ஐந்து மிலேச்ச அரசர்களையும் பிடித்துக் கொல்ல உத்தரவிட்டுவிட்டான். அவர்களும் மடிந்தார்கள், அவர்கள் சேனை களும் கலைந்து ஓடிவிட்டன.

ராக்ஷஸனுக்கு இனிச் செய்யக்கூடியது ஒன்றும் இல்லை. எந்த மலையகேதுவுக்காக இராவில்கூடத் தூங்காமல் இத்தனை பாடுகள் பட்டானே அந்த மலையகேதுவே தன்னைச் சந்தேகித்து, தன் நட்பினரையும் கொன்றுவிட்டு, தன் தனிப்படையோடும் சென்று சாணக்கியன் வைத்த பொறிக்குள்ளே மாட்டிக் கொள்ளப் போகையில், இனிச் சந்திரகுப்தனைச் சிங்காதனத்தினின்று வீழ்த்திவிடலாகும் என்கிற எண்ணமே அவனுக்குப்போய்விட்டது. இனி, பாடலீபுரம் சென்று சந்தனதாசன் உயிரோடிருந்தால் அவனையாவது விடுவிக்க முயலலாம் என்று இலேசாக நினைத்து ராக்ஷஸன் பாடலீபுரத்தைநோக்கிப் புறப்பட்டுவிட்டான்.

சாணக்கியனும், ராக்ஷஸன் வேறொரு அமையத்தில் சொல்லியதுபோல, ஒரு தடவை விதைத்து இரண்டு மாசூல் அறுத்துவிட்டான். ராக்ஷஸனை மலையகேதுவிடமிருந்து பிரித்ததன்றி, மலையகேதுவையும் தனியே படையெடுத்து வரும்படி செய்து அவனை வெகு சுலபமாய்ச் சிறைசெய்துவிட்டான்.

இனி ராக்ஷஸனைச் சந்திரகுப்தனிடம் சேர்க்கவேண்டியது ஒன்றுதான் பாக்கியிருந்தது. அவனுடைய பெருந்தன்மையாலேயே

அவனைக் கட்டவேண்டுமென்று சாணக்கியன் நினைத்ததானது அசல் சாணக்கியதந்திரமே. மனிதருடைய உள்ளங்கள் சாணக்கியனுக்குச் சதுரங்கப் பேதாக்கள்! அவை அவன் நினைத்த படியெல்லாம் ஆடின!

ராக்ஷஸனைப்பின்தொடர்ந்துவந்த ஒற்றன் அவன் பாடலீபுரத்திற்கு வந்த சங்கதியைத் தெரிவித்ததும் சாணக்கியன் நடிப்பதில் நிபுணனை வேறொரு ஒற்றனுக்குச் சில தந்திரங்கள் சொல்லிக்கொடுத்து அவனை ராக்ஷஸன்பின்னே அனுப்பினான். ராக்ஷஸன் அயர்ந்துபோய் ஒரு தோப்பில் உட்கார்ந்துகொண்டு, தன் முயற்சிகளெல்லாம் விபலமாய்ப் போய் விட்டதை நினைந்து விஷாதத்தில் ஆழ்ந்து விட்டான். அந்தச் சமயத்தில் ஒற்றன் சாணக்கியன் சொற்படி, ராக்ஷஸன் கண்ணுக்குப் படும்படியாகத் தூக்குப்போட்டுக் கொண்டு சாக எத்தனிப்பவன்போலப் பாவனை செய்தான். ராக்ஷஸன் உடனே கிட்ட நெருங்கி அவன் தூக்கிட்டுக்கொள்ளுவதின் காரணத்தை வினவினான். ஒற்றனும் முதலில் சொல்ல இஷ்டமில்லாதவன் போலப் பாசாங்கு செய்து ராக்ஷஸனுடைய ஆவலைப் பெருக்கி, பிறகு மெல்ல, தன்னுடைய நண்பன் ஜிஷ்ணுதாசன் என்பவன் அக்கினிப்பிரவேசம் செய்யப்போகிற

தால் தனக்கு இனி உயிரோடிருக்கப் பிடிக்க வில்லை என்று சொல்லிக் காரியத்தில் இறங்கி ஞன். ஆனல் ராக்ஷஸன் அவனை மறுபடியும் விலக்கி ஜிஷ்ணுதாசன் அவ்வாறு செய்வதற் குக் காரணம் என்ன என்று விசாரிக்க ஒற்றன், சந்தனதாசன் என்று ஜிஷ்ணுதாசனுக்கு ஒரு நண்பனிருப்பதாகவும், நந்தர்களின் மந்திரி யான ராக்ஷஸனுடைய மனைவி மக்களை அரா சாங்கத்தினிடம் ஒப்புவிக்காததற்காகச் சந்தன தாசனைக் கொலைக்களத்துக்கு இட்டுப்போயிருக் கிறார்கள் என்றும், ஜிஷ்ணுதாசன் தன் துணை வன் கஷ்டம் தாங்கமாட்டாமல் அக்கினிப்பிர வேசம் செய்கிறான் என்றும், தன் நண்பன் போனபிறகு தனக்கு உலகவாழ்க்கை விஷ மாய்ப் போய்விட்டது என்றும் சொன்னன். சாணக்கியன் எதிர்பார்த்தபடி ராக்ஷஸன், தனக்காக ஒருவன் பிராணனை விடுவதைத் தான் பார்த்துக்கொண்டு சும்மாயிருப்பது தகுதியில்லை என்று நினைத்து அவ் ஒற்றனிடம், தானே தான் ராக்ஷஸனைபடியாலும், தான் கொலைக்களத்துக்குச் சென்று சந்தனதாசனை மீட்க ஏற்பாடு செய்யப் போவதாலும், ஜிஷ்ணு தாசனும் ஒற்றனும் தற்கொலை புரிந்துகொள்ள வேண்டியதில்லை என்று சொல்லிவிட்டுக்

கொலைக்களத்தை நோக்கிப் புறப்பட்டு விட்டான்.

கொலைக்களம் வந்ததும் ராக்ஷஸன், அங்கே சந்தனதாசன் மனைவியும் மகனும் பரிதபித்துக் கொண்டு அழுவதையும் சந்தனதாசன் அவர்களைத் தேற்றிக்கொண்டு பிராணனைவிட உற்சாகத்தோடு முன் வருவதையும் கண்ணுற்றான். ராக்ஷஸனைக் கண்டதும் சந்தனதாசன் தன் கதியை நோக்கி வருந்தாமல், என் சத்துரு வசம் வந்துவிட்டாய் என்று சிநேகபூர்வமாய் அவனைக் கண்டித்தான். ஆனால் ராக்ஷஸன், "உன் பெருந்தகைமையில் ஒரு லேசாலேசம் நான் காண்பிக்கக்கூடாதா?" என்று சொல்லி விட்டு, கொலையாளிகளைப் பார்த்து, "உங்கள் இரக்கமற்ற அரசனிடம் சென்று ராக்ஷஸன் அகப்பட்டுவிட்டான் என்று சொல்லுங்கள்," என்று கூறி அங்கேயே நின்றுவிட்டான்.

சாணக்கியனுடைய உத்தரவுப்படி ராக்ஷஸனைச் சாணக்கியன் வீட்டுக்குக் கொணர்ந்தார்கள். சாணக்கியன் உடனே, "மந்திரி, வர வேண்டும்!" என்று மரியாதை செய்து, தான் அவனைச் சந்திரகுப்தன்பால் சேர்க்கச் செய்த சூழ்ச்சிகளை யெல்லாம் சொல்லிக்கொண்டிருக் கையில், முன்னமே ஏற்பாடுசெய்துகொண் டிருந்தபடி சந்திரகுப்தன் அங்கே சபிகர்க

ளோடுவந்தான். சாணக்கியன் சமயோசிதமாய் "இதோ, உன் வமிசத்தின் பரம்பரை மந்திரியான ராக்ஷஸன் வந்திருக்கிறான்: அவனுக்கேற்ற மரியாதைகளைச் செய்வாய்," என்று சந்திரகுப்தனைப் பார்த்துச் சொன்னான். சந்திரகுப்தன் ராக்ஷஸனை நமஸ்கரிக்க, அவன், "சந்திரகுப்த அரசனுக்குச் சயம் பெறுக!" என்று ஆசீர்வதித்தான். சந்திரகுப்தனும் சாமர்த்தியமாய், "என் குருவோடு உன்னைப் போன்ற மந்திரிசிரேஷ்டர்களும் எனக்கு மந்திரிகளாக அமர்ந்துவிட்டால் எனக்கு வெற்றி கிடைப்பதில் ஐயமேது?" என்றான். ராக்ஷஸன் என்ன செய்வது என்று தெரியாமல் திகைக்கையில் சாணக்கியன் கடைசி வில்லை அழுக்கி, "சந்தனதாசன் உயிரைக்காக்கவிருப்புகிறாயோ, இல்லையோ?" என்று ராக்ஷஸனைக் கேட்டான். "அதைக் கேட்கவும் வேண்டுமோ?" என்று ராக்ஷஸன் சொல்லச் சாணக்கியன், "ராக்ஷஸன் தன் க்ஷாத்திரத்தை விடாமலிருக்கையில் சந்திரகுப்தன் மாத்திரம் எவ்விதம் சந்தனதாசனுக்கு இரங்குவான்?" என்று சொல்லிவிட்டு, மந்திரி ஸ்தானத்துக்கு அடையாளமான கையீட்டியை அவனிடம் கொடுத்து, "இதைத் தாங்கினாயானால் உன் சிநேகிதன் பிழைப்பான்," என்று முடித்தான். பல

ஆக்ஷேப சமாதானங்களும் ஆனபிறகு கடைசியில் ராக்ஷஸன், "விஷ்ணுகுப்தனே, நான் பணிந்தேன்; சிநேகம் வென்றுவிட்டது; சந்தனதாசனைக் காப்பதற்காக நான் சந்திரகுப்தனுக்கு மந்திரியாகச் சம்மதிக்கிறேன்," என்று சொல்லிவிட்டான்.

சந்தனதாசனை விடுதலை செய்துவிட்டார்கள்.

ராக்ஷஸன் மலையகேதுவையும் விட்டுவிட வேண்டும் என்று கேட்டுக்கொண்டான். சந்திரகுப்தன் சாணக்கியன் முகத்தைப் பார்க்க, அவன், இனி மலையகேதுவால் சந்திரகுப்தனை அசைக்கமுடியாதாகையால், "ஒரு மந்திரி வேண்டுகிற முதல் பிரார்த்தனையை நிராகரிப்பது நியாயமல்ல," என்று சொல்லி, ஒரு கஞ்சுகியை அழைத்து, "மந்திரியான ராக்ஷஸன் கேட்டுக்கொண்டதன்பேரில் அரசன் மலையகேதுவைக் காவலினின்று விடுவித்து அவன் ராஜ்ஜியத்தையும் அவனுக்குத் திருப்பிக் கொடுத்துவிடும்படி ஆக்ஞாபித்திருக்கிறான்" என்றுகாவலாளிகளுக்குத் தெரிவிக்கச்செய்து, அவனை மரியாதைகளோடு அவன் ராஜ்ஜியத்திற்கு அனுப்பிவிட்டான்.

ராக்ஷஸன் மந்திரசபையில் அமர்ந்து, சந்திரகுப்தனுடைய சீர்த்தியை வளர்ப்பதையே நோக்கமாகக்கொண்டு அவனுக்காகப் பரிபூரணமாய் உழைத்துவருவானாயினான்.

சாணக்கியனும் தன் குடுமியை முடிந்துகொண்டுவிட்டான்.

முத்திராராக்ஷஸக் கதை
முற்றிற்று

புதுவை சைகோன் சின்னையா அச்சுக்கூடம்.

[illegible]

16 10 90

[illegible]

[illegible] ✓